149416

சிவஞான.சாமிதை சௌமியம்

இ23:38உ
N29

149416

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

—(§)—

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானசுபிஷெளமியம்

இஃது

சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவரும்

வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞான விலாச

சபாப்ரசங்கக் கோளரியும்,

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அருட்கவி

கி. வை. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

"சிவஞானப்பாதேசியாரென்னும்"

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

—(*)—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினால்

தமது

சென்னை சேத்துப்பேட்டு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

—[]—

44 - வது ௵த்தின் திருப்பணியாக கலியுகாப்தம்

5025 க்குச் சரியான தமிழ் ருத்ரோத்காரி ௵ பங்குனி ௴ 7 ௳

சுவாமி சந்நிதியில் ஷை தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1924 ௵ மார்ச் ௴ 19 ௳

—)§(—

18 SEP 1924

149
Q23:38





தெய்வப்புலமை

ஸ்ரீமத் - திருவள்ளுவ நாயனார்.

(இவரது சரித்திர சுருக்கம் ௰ம் பக்கத்திலும்
இவரது துதி ௬௭, ௬௮ பக்கங்களிலும் காண்க.)

உ

சிவமயம்




திருச்சிற்றம்பலம்.

—(§)—.

தென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானசுபிஷசௌமியம்

சிவபராதீன நிஜதத்வ நிருபணம்,

பதித்வ சொருபாதிக்ய விபூதம்.

—0—

## சி வா க ம ம்.

" ஓம் ஸர்வஜ்ஞத : த்ருப்தி ரநாதிபோத ஸ்வதந்த்ரத :
நித்ய மலுப்தசக்தி : அநந்த சக்திச்ச விபோர்
விதிஜ் ஞாஷ்ஷடாகு ரங்கா நி மஹேச்வரஸ்ய
அங்காவ்யாத் யநந்த மாங்கல்ய குணகண மணிஜலதே பரம சிவஸ்ய " எனவும்,

ச்ருதி.

சிவமத்வைதம் சாந்தம் சதுர்த்தம் மந்யந்தே எனவும்,
ப்ரம விஷ்ணு, ருத்ரேந்த்ரா ஸ்ஸம்ப்ர ஸூயந்தே நமோ நம :
எனும், சிவாகமத்தின் மங்களாசார வாக்கியத்தின் சொருபானந்த வள்ளலாகிய பரமசிவனையே எல்லா தெய்வத்திலும் மேலானவரென்று சதா வந்தனை வழிபாடுடன் நமஸ்கரிக்கின்றேன்.

அகிலகாரண பூதபௌதிக பரமாணுபவ சர்வஜோதிநாலங்கார விபூ நாத்ம கோலாகல பராபர (ஏக, உபய, திரித்வ, சதுர்த்த, பஞ்ச) மூர்த்த மாகும் பிரம, விஷ்ணு, ருத்ர, மஹேஸ்வர, சதாசிவமாகிய பஞ்சகர்த் தாக்களாகவும், அவையே; சிருஷ்டி, திதி, சம்ஹார, திரோபவ, அநுக்கிரஹ மாகிய ஐந்தொழிலையும் நடத்திவைக்குங் கடவுளாகவும், அத்தகையானச் செயலையும், அருபமாயுள்ள தனது விஞ்ஞானமயத்தை உலகாதியந்தமா யுள்ள தேவர்முதல் மக்கள்வரையும், அவைமுதல் பசுபட்சியாதி மண் முதல் தொடக்கமாயுள்ளவையான சராசரமென்னும் பெயருடையனவா யமைந்துள்ள பதார்த்தங்கள், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என வமைந்து அவ்வவ்வுருவுடைத்தாம் மெய், வாய், கண், மூக்கு, செவி எனவும் அவைபால்; ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், மணம் எனும் சுவை, ஒளி ஊறு, ஓசை, நாற்றம் ஆகக்கலந்து தத்வாதாசார விதேகதேக, போகமோக கன்மதன்ம, சன்மங்களுக்கெல்லாம் எவ்வகைதாத்துங்கூடாது எவைக்குந் தலைமைப்பொருளாதனன், ஞாதுரு, ஞானம், ஞேயம் என்பதே வுருவை வடிவினதாகிய சந்து, சித்து, ஆனந்தமே; ஈசானம், தற்புருடம், அகோ ரம், வாமனம், சத்தியோசாதம், எனும் ஐந்துமுக சொரூபமாம் விக்ரஹ பாத்தியதை யுடையனவாக வெண்பித்து அதனைத்தாரத்தலட்சண ப்ர ணவ பஞ்சாக்கரமே சருவமயமாகிய (சிவமயமே) நாம, ரூப, தேவ, காருண்யமாம்.

—[]—

## உண்மைப் பரிசோதனுப்பியாச வுருவகப் பிரமாணம்.

——•——

ஓம்! ஓங்காரத்தின் அர்த்தரூபமாயுள்ளது பஞ்சாட்சரம்

பஞ்சாட்சரத்தின் மகிமை (சிவ) என்னும் ஆண் எழுத்தும் (நம) என்னும் பெண்ணெழுத்தும் (ய) என்னும் அலியெழுத்துஞ்சேர்ந்து பசு, பதி, பாசத்திலடங்கும் இதை உச்சரிக்கு முறைமையினாலே;

(க) ஸ்தூல பஞ்சாட்சரமென்றும், (உ) சூக்ஷ்ம பஞ்சாட்சரமென்றும், (௩) காரண பஞ்சாட்சரமென்றும், (௪) மகா காரண பஞ்சாட்சரமென்றும், (௫) அதிசூக்ஷ்ம பஞ்சாட்சரம் அல்லது மஹாமநு என்றும் ஐவகைப்படும்.

ஸ்தூல பஞ்சாட்சரம் (நமசிவய)
சூக்ஷ்ம பஞ்சாட்சரம் (சிவயநம) என்று சொல்லப்படும்.



| | | |
|---|---|---|
| மூலாதாரத்தில் | கணபதி | ஓம் என்னும் பிரணவமயமாகவும் |
| சுவாதிட்டானத்தில் | (பாதம்) | பிரமாவும், |
| மணிபூரகத்தில் | (உந்திக்கமலம்) | விஷ்ணுவும் |
| அனாகதத்தில் | (இருதயகமலம்) | ருத்திரனும் |
| விசுத்தியில் | (கண்டஸ்தானம்) | மஹேஸ்வரனும் |
| ஆக்ஞையில் | (நெற்றி) | சதாசிவமும், வீற்றிருக்கின்றனர்! |

ஸ்தூல பஞ்சாட்சரமாகிய நமசிவயவென்பது போகத்தையும்,

சூக்ஷ்ம பஞ்சாட்சரமாகிய சிவயநம வென்பது மோக்ஷத்தையுந் தருதலால்; முமுட்சுகளாயுள்ளவர்கள் சூக்ஷ்ம பஞ்சாட்சரத்தையே விதிப்படி ஜபிக்கக் கடவர்.

சூக்ஷ்ம பஞ்சாட்சரத்திலுள்ள சிகாரம் - சிவம் வகாரம் - அருள் யகாரம் - ஆத்மா, நகாரம் - திரோதை, மகாரம் - மலம், ஆகலின் இந்த முறைமையுணர்ந்து ஊனநடனமாகிய நகார மகாரத்திலேசென்று ஜனன மரணப்பட்டுப் போகாமல், ஞான நடனமாகிய சிகார, வகாரத்தைப் பொருந்தி சிகார முதலாக வுச்சரித்து, அப்படி உச்சரிக்கிற முறைமையையும்விட்டு வகாரமாகிய ஞானத் தானுயிர்க்கவே; சிகாரமாகிய ஞேயத்திலே அழுத்துவிக்கும். அது எப்படியெனில், சத்தியாகிய வகாரம் இடமாகச் சிவமாகிய சிகாரத்தின் இடையிலழுத்தவே அத்தன்மை யுண்டாக்கும். இந்த அநுபவ ரகசியத்தையும், பஞ்சாட்சரம், ஏகாட்சரமாமாறு, நகாரத்தில் ககாரமும், யகாரத்தில் மகாரமும், சிகாரத்தில் வகாரமும், அதில் யகாரமும் ஒடுங்கு முறைமையினையும், காரணபஞ்சாட்சரம் மகாகாரண பஞ்சாட்சரம், மகாமநு, இம்மூன்றையும் குருபரன் திருத்தாளைச் சேர்ந்து வழிபட்டுத் தெரிந்துகொள்க. இதைப்போலவே; (யநமசிவ - வயநமசி - மசிவயந) எனும் பஞ்சாட்சரத்தின் பேதாபேதங்களையும், அவைமாறுதலாலுண்டாகும் நன்மைத் தீமைகளையும் குருமுகத்தாலுணர்க; கோழியானது கல்லைக்கீறி நெல்லையுண்பதுபோலப் பிரயோசனத்தையடைவானென்னி யெழுதப்பட்டன.

—)•(—

ஸ்ரீமத் - திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

—)•(—

“ துஞ்சலுந் துஞ்சலிலாதப் போழ்தினு, நெஞ்சகைந்து நினைமினு டோறும், வஞ்சகமற்றடி வாழ்த்த வந்தகூற் றஞ்ச வுதைத்தன வைந்தெழுத்துமே ”

ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள்.

—(‡)—

" சொற்றுணை வேதியன் சோதி வானவன், பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ, கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே"

" வைத்தபொரு ணமக்காமென்று சொல்லி மனத்தடைத்துச், சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லால், மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திருப்புலியூர், அத்தனருள் பெறலாமோ வறிவிலாப் பேதை நெஞ்சே"

" ஏதுமொன்று மறிவில ராயினும், ஓதியஞ்செழுத்தும் முணர் வார்கட்குப், பேதமின்றி யவரவ ருள்ளத்தே, மாதுந் தாமு மகிழ்வர் மாற் பேறரே"

" இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள், அருந்தவந் தரு மஞ்செழுத் தோதினால், பொருந்து நோய்பிணி போகத் துறப்ப தோர், மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே"

—]§[—

ஸ்ரீமத் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

" மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே"

ஸ்ரீமத் - மாணிக்கவாசக சுவாமிகள்.

" போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய செயசெய போற்றி போற்றி."

" நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே"

ஸ்ரீமத் - திருமூலர் திருமந்திரம்.

" ஐம்பதெழுத்தே யனைத்து வேதங்களும், ஐம்பதெழுத்தே யனைத் தாகமங்களும், ஐம்பதெழுத்தி னுடைமை யறிந்தபின், ஐம்பதெழுத்தே யஞ்செழுத்தாமே"



" தெள்ளமுதூறச் சிவாயநமவென்று, வுள்ளமுதூற வொருக்கா லுரைத்திடும், வெள்ளமுதூறல் விரும்பியுண்ணாதவர், துள்ளிய நீர்போற் சுழல்கின்றவாறே"

" குருவழியாய குணங்களினின்று, கருவழியாய கணக்கை யறுக்க வரும்வழிமான மறுக்கவல்லார்கட், கருள்வழி காட்டுவ தஞ்செழுத்தாமே.

உபதேசகாண்டம்,

" இனைய மந்திரத் தியல்புணர்ந் தோர்பொழு திசைப்போர்
அனையர் தங்குழுப் புண்ணியம் யாவையு மடங்கும்
வினையு நீங்குவர் மேதினி புரந்தினி தளிப்பர்
புனையு மேற்பதம் புகுவர்முத் தேவரிற் பொலிவார்"

" அஞ்செழுத் தெனு மருமறை மந்திரமதனை, நெஞ்சழுத்தவர் முழு முதற்றேவனை நிகர்ப்பார், பஞ்சபாதகர் மீதுமற் றவர்நிழற் படினுஞ், செஞ்சவே யவர்க் காண்கினும் பவத்தொலை செல்லும்"

" ஆதியருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை, யோதியுணர்ந் தாரை யுள்ளத் துணர்ந்தாலுந், தீது பிறப்பறப்பா ரன்னவர்க்குத் தீங்கி ழைப்பார், போது நரகினுக்கு மன்னுதல் போதாதே"

வாயுசங்கிதை.

" உரைத்தவஞ் செழுத்தின் வீறில் கொருநூறு கோடியாண்டு
விரிக்கினும் விரிக்கலாகா தாயினும் விமலர் போற்றிச்
சுருக்கமா யுரைப்பா முன்னைத் துகளறு குடிலையோடு
மிருக்குமா றெழுத்தாயீறி லிறைவனஞ் செழுத்துமன்றோ"

பிரமோத்தரகாண்டம்.

" கருப்பயோனியிற் சுழிப்படு பவக்கடல் கடப்பர். பொருப்பினெம் பிரா னுயிர்க்கெல்லாம் புணையெனப் புகன்ற, விருப்பஞானவஞ் செழுத்தினை யுளத்திடை வித்திற், றருப்பை சூட்டிமேல் வேள்வியேன் குணமேன் றவமேன்"

சிவதருமோத்தரம்.

" அத்தரந் தியங்கவல்ல வசுரரு மணுக மாட்டார், நித்திய சித்தக் கொர்தைம் பேய்களுந் தீண்டமாட்டா. செந்தழ லென்னவஞ்சித் தியவா யிரவுந் தீண்டா, மந்திர நவிற்றுவாரை மறலியு மஞ்சுமன்றே"

ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள்.

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்சழுத்தி யொன்றாகி நிற்குநா ளெந்நாளோ.

பட்டினத்தடிகள்.

" காய்க்குண்டு தேனுண்டு சைக்குண்டு பிச்சை சமயமெல்லா
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட்சர மதியாமல் வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னருள் ஞானங்க ளோக்குதற்கே

சிவவாக்கியர்.

" சிவாயமந் தெழுத்திலே தெளிந்துவான மானதும்
சிவாயமந் தெழுத்திலே தெளிந்துதேவ ரானதுஞ்
சிவாயமந் தெழுத்திலே தெளிந்துமுத்தி சேர்வதும்
சிவாயமந் தெழுத்தையுந் தெளிந்துபாரு மும்மையே ".

" சிவாயமென்ற வட்சரம் சிவனிருக்கு மட்சரம்
உபாயமென்று நம்புவோர்க்கு உண்மையான வட்சரங்
கபாடமிட்ட வாசலைக் கடந்துபோன வாயுவை
உபாயமிட் டழைக்குமே சிவாயமந் தெழுத்துமே "

எனப்போந்த அனந்த ஆகமசாத்திர வழிகளாலெடுத்தாளப்பட்ட பரமசிவமே; பரிபூரணத்தம், பரமசுகம், கேவலம், நிர்மூர்த்தியம், விகாரிதம், சிற்சொரூபம், ஏகம், நித்தியம், விமலம், அசலம், சர்வசாட்சி பூதம், சஜாதிக விஜாதிக சுகதபேதாதிதம், சிவசொரூபம், பராதீதம், நிர்குணாதீதம், சிவம் என விளங்கலால்; பதித்துவமுடையவ ரவரே யாதவர்.

—[]—

## ஸ்ரீமத் – திருஞான சம்பந்த சுவாமிகள்.

திருவெழுக்கூற்றிருக்கை.

—(§)—

" ஓருருவாயினை மானாங்காரத்
தீரியல்பாயொரு விண்முதற் பூதல
மொன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை
யிருவரோ டொருவ னாகிநின்றனை
யோரானீழ லொண்கழ லிரண்டு
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
யிருநதி யரவமோ டொருமதி சூடினை



யொருதா ளீரயின் மூவிலைச் சூல
நாற்கால் மான்மறி யைந்தலை யரவ
மேந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
யொருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
யைம்புல னான்கா மந்தக் கரண
முக்குண மிருவளி யொருங்கிய வானோ
ரேத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்த்துமுப் பொழுதகுறை முடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
யமைத் தாறங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
யறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை
யிகலி யமைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்கு நாற்கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வாபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
யொருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை
யையுறு மமணரு மறுவகைத் தேரரு
மூழியு முணராக் காழி யமர்ந்தனை
யெச்ச னேழிசையோன் கொச்சையை மேவினை
யாறுபத மைந்தமர்ந் கல்வி
மறைமுத லுன்கு
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
யிருமையி னொருமையு மொருமையின் பெருமையு
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

கழுமல முதுபதிக் கவுணிய னறியு
மளைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே "

—(‡)—

## திருவெழுக்கூற்றிருக்கை திருவுள்ளக்கருத்து.

—]§[—

ஓருருவாயினை என்றது எல்லாத் தத்துவங்களையும் கடந்து வாக்கு மனாதிகளுக்கு மெட்டாமலிருக்கின்ற தற்சொரூபத்தான் பஞ்சகிர்த்தியங்களையும் நிகழ்த்தவேண்டி யிச்சையா லெடுத்துக்கொண்டிருக்குந் திருமேனியை,

மானாங்காரத்தீ ரியல்பாய் - என்றது, மாவென்பது சத்தியாம் காரத்திரியல்பாய் தற்சத்தியைக்கொண்டு சர்வானுக்கிரகமாகு பஞ்சகிர்த்தியங்களை நடத்தவேண்டிச் சத்திசிவமாகிய விரண்டுருவாயினை,

ஒரு - என்றது, அந்தச் சத்தியுடனேகூடி யொன்றாகி நின்றனை

விண்முதல் பூதல மொன்றிய விருசுடரும்பர்கள் பிறவும், படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினை - என்றது, ஆகாச முதலாகப் பூமியீறாகவுள்ள பஞ்சபூதங்களையுஞ் சந்திராதித்தர்களையுந் தேவர்களையு மற்றுமுள்ள ஆத்மாக்களையும் படைக்கைக்கும், காக்கைக்கும், அழிக்கைக்கும் பிர்மா, விஷ்ணு, ருத்திரனென்கின்ற திரிமூர்த்திகளுமாயினை

இருவரோ டொருவனாகி நின்றனை - என்றது, பிர்மாவையும் விஷ்ணுவையும்; இடத்திலும், வலத்திலும், அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாய் நின்றனை

ஓரால் நீழலொண்கழ லிரண்டு முப்பொழுதேத்திய நால்வர்க்கொளி நெறி காட்டினை - என்றது, பிருதுக்களுக்கெல்லாந் தலைமையாயிருப்பதொரு வடவிருக்ஷத்தினிழலிலே யெழுந்தருளியிருந்து நின்னழகிய ஸ்ரீ பாதங்களை; உதய, மத்தியான, அஸ்தமனமென்கின்ற மூன்றுகாலமுந் தோத்திரஞ்செய்யாநின்ற, அகஸ்தியன், புலஸ்தியன், சனகன், சனற்குமாரனென்னும், நால்வகை ரிஷிகளுக்குந் தற்சொரூபமான திருமேனியைக் காட்டியருளினை

நாட்ட மூன்றாகக்கோட்டினை - என்றது, பிர்மா முதலாயிருக்கின்ற ஆத்மாக்கள் ரூபமென்னும் புலனாலே சர்வபதார்த்தங்களையும் காணும்படியாலே சூர்ய சந்திராதித்தர்களையும், அக்கினியையு மூன்று கண்ணாகக் கொண்டருளி அத்தகாரமான விருளை யோட்டினை



இருநதி யரவமோ டொருமதிசூடினை - என்றது, பெரிதாகிய கங்கையையு மொப்பில்லாத பாம்பினையு மொருகாலத்திலு முதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடியருளினை

ஒருதா ளீரயின் மூவிலைச் சூல நாற்கான் மான்மறி யைந்தலை யரவ மேந்தினை - என்றது, பிரணவமாயிருக்கின்ற ஒருகாம்பினையும், இருகின்ற கூர்மையினையும், பிர்மா, விஷ்ணு, ருத்திரனென்கின்ற மூன்றிலையினையுமுடையதொரு சூலத்தினையும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையும், காலுகாலாயிருக்கின்றதொரு மான்கன்றினையும், ஸ்ரீ பஞ்சாட்சரங்களையும், ஐந்து தலையாகவுடையதொரு மகா நாகத்தினையும் அஸ்தங்களிலே தரித்தருளினை.

காய்ந்த நால்வாய் மும்மதத்திருகோட் டொருகரி யீடழித்துரித்தனை - என்றது, தன்னிழலைக் காயத்தக்க கோபத்தினையும், தொங்கும் வாயினையு மிரண்டு கொம்பினையுமுடையதொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பெலங்களையெல்லாங் கெடுத்து, உரித்துப்போர்த்தனை

ஒருதனு விருகால் வளையவாங்கி முப்புரத்தோடு நானிலமஞ்சக் கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை - என்றது; ஒப்பில்லாதப் பொன்மலையாகிய வில்லை, இருதலையும் வளையவாங்கி அஸ்திரத்தைத் தொடுத்து மூன்றுபுராதிகளாகிய அவுணரை யறுத்தனை

ஐம்புலநாலா மந்தக்கரண முக்குணமிருவளி யொருங்கியவானோ ரேத்த நின்றனை - என்றது, சத்த, பரிச, ரூப, ரச, கந்தமென்னப்பட்ட ஐம்புலன்களையும், மனம், புத்தி, யாங்கார, சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத, தாமத, சாத்துவிதமென்கின்ற மூன்று குணங்களையும், பிராணன், அபானனென்கின்ற விரண்டு வாயுவையும், மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு ஏகாக்கிர சித்தராயிருக்கின்ற தேவர்களேத்த நின்றனை

ஒருங்கிய மனத்தோ டிருபிறப்போர்த்து முப்பொழுது குறைமுடித்து நான்மறையோதி ஐவகைவேள்வி யமைத்தாறங்க முதலெழுத்தோதி வான்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும் பிரமபுரம் பேணினை - என்றது, ஆகாரம், நித்திரை, பயம், மைதுனமிவற்றிற் செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்களிலேயொருக்கி முன்பு தாம் மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும், உபநயனத்தின்பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து மூன்றுசந்தியும், செபதர்ப்பண, அனுட்டான ஓமங்களையுமுடித்து இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையுமோதி; சிவபூசை, குருபூசை, மகேசுரபூசை

பிராமணபோசனம், அதிதிபூசிப்பு, என்கின்ற ஐந்து வேள்வியுமுடித்து ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு கன்மங்களையும் நடத்தி இவைகளுக்கு முதலாயிருந்துள்ள பிரணவத்தையுமுச்சரித்துத் தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு அவிகொடுத்து மழையைப் பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை

ஆறங்கமாவன - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம்.

அறுபதமூரலும் வேணுபுரம் விரும்பினை - என்றது. அறுகாலுடைய வண்டுகளிசைபாடும்பொழில் சூழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளினை "(வேணுபுர மென்பதற்குக் காரணம்) வேணு என்பானொரு இந்திரனுடன்; சமுகனென்பானொரு அசுரன்வந்து யுத்தம்பண்ண அவனுடனே போர்செய்து அபஜெயப்பட்டுப் பிரமபுரமென்று முன்சொன்ன பதியிலேவந்து பரமேசுவரன் திருவடிகளிலே; தம்பிரானே! அடியேனுக் களித்தருளின சுவர்க்க லோகத்தைச் சமுகன் சங்கரிக்க அவனுடன் யுத்தம்பண்ணி அபஜெயப்பட்டுப் போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே; தம்பிரானும் கணேசுரனைத் திருவுளத்தடைத்து, வாராய் கணேசுரனே! சமுகன் வரப்பிரசாதமுடையவன் ஒருவராலுமவனைச் செயிக்கப்போகாது; நீயுமவன் வடிவாகச்சென்று உன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவென்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட்டுவாவென்று திருவுளம்பற்றக் கணேசுரனு மவன்வடிவாகச்சென்று தன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங்கொன்று வேணுவென்கின்ற இந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட வுண்டானதென்க.)

இகலியமைந்துணர் புகலியமர்ந்தனை - என்றது, தேவர்கள் முன்பு; புகலிடமென்று புகுதலால் திருப்புகலியென்பதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை

தேவலோகமான அமராபதியைச் சூரபத்மா என்பானொரு அசுரன் வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளார் போருது அபஜெயப்பட்டு யுத்தத்தையொழிந்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீ பாதமொழிய: புகலிடமில்லையென்று வேணுபுரத்திலேவந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி பலநாளுமுண்டான நலிவை விண்ணப்பஞ்செய்து எங்களை ரட்சித்தருளவேண்டுமென்னப் பரமேசுவரனும், சுப்பிரமணியரைத் திருவுளத்தடைத்து வாராய் சுப்பிரமணியனே! நீ



ஆறுமுகமும், பன்னிரண்டு கையுமாகப்போய் சூரபத்மனையுஞ்செயித்து தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுத விட்டுவாவென அருளைக் காரணம்.

பொங்குநீர்க் கடல்சூழ் வெங்குரு விளங்கினை - என்றது மிகவும் கோபிக்கப்பட்ட கடல்சூழ்ந்த வெங்குரு வென்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை

லோகங்களுக்கெல்லாம் தேவ குருவாகிய பிரகஸ்பதி பகவான் என்னையொழிந்து கர்த்தாவுண்டோவென்று மனுவிலங் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன் மகாகெர்வியாயிருந்தானிவனுடைய கெர்வத்தை யடக்கவேண்டுமென்று திருவுளத்தடைத்தருளி தேவர்க்கு குருவாகிய அதிகாரத்தைமாற்றியருளப் பயப்பட்டுப் புகலியென்கின்ற திருப்பதியிலேபோய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி; அடியேன் செய்த அபராதங்களைப் பொறுத்தருளி யடியேனை ரட்சித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் தம்பிரானும் நீ வழிபாடியாயிருந்தாயென்று திருவுள்ளமாய் முன்புபோல தேவர்களுக்கு குருவாகிய அதிகாரத்தையும் கொடுத்த காரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாழிமுவுலகும் புதையுமேல்மிகுந்த தோணிபுரத் துறைந்தனை - என்றது, பாழியென்கின்ற சலம் பிரளயமாய்ப் பூமி, அந்தர, சுவர்க்கமாகிய மூன்று லோகங்களையும் புதைப்ப அதைச் சங்காரம்பண்ணியிருளிவதின்மேலே தோணிபோலமிதந்த வெங்குருவாகிய தோணிபுரமென்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை

தொலையா விருநிதி வாய்ந்த பூந்தராயேய்ந்தனை - என்றது, வேண்டினோர் வேண்டியதைக் கொடுத்துத் தொலையாச் சங்கநிதி, பதுமநிதியென்று சொல்லப்பட்ட இரண்டு நிதிகளும், பூவுந் தாராயும் பூசிக்கையாலே திருப்பூந்தராயென்னப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனை

ஒருகாலத்து தொலையாத வரத்தைப்பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலேவந்து தம்பிரானை பூசித்தனவே உங்களுக்கு வேண்டுவதென்னவென்று கேட்டருள, தம்பிரானே! அடியோங்களுக்கு எல்லாக் காலங்களுந் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தைப் பிரசாதித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அங்ஙனே தொலையாத வரத்தையுங்கொடுத்தருளி மகாசங்காரத்திலும் தம்முடைய ஸ்ரீபாதங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங் கொடுத்தருளினதால் பூந்தராயெனப் பெயருண்டாயது.

வரபுரமென்றுணர் சிரபுரத்துறைந்தனை - என்றது, வரத்தைத் தருவதான புரமென்றுணர்தற்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந் தருளி யிருந்தனை

தேவர்களும் பிர்மா விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தை யுண்டாக்கித் தேவர்களை யிருத்தி விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துக் கொண்டு வருகிறவேளையில்; ராகு, கேதுவென்கின்ற இரண்டு பாம்புங் கூடிக் காத்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக இருப்பதுகண்டு விஷ்ணு பகவான் அமிர்தம்படைத்துவருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலைபற வெட்டுகையா லுடலிழந்து; நாகமிரண்டும் நம்முடல்தரக்கடவான் பரமேசுவரனொழிய வேறே யில்லையென்று திருப்பூந்தராயிலேவந்து பரமேசுவரனை நோக்கி இரண்டு சிரங்களும் பூசித்ததனால் சிரபுரமென்று பெயருண்டாயிற்று.

ஒருமலை யெடுத்த விருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை - யென்றது, பெருமையுள்ள கயிலாயமென்னும் பேரையுடைத்தாய் உனக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளிமலையையெடுத்த பெரிய புசபலங்கொண்ட ராவணனுடைய கர்வத்தைக் கெடுத்தருளினை.

புறவம் புரிந்தனை - என்றது. பிரசாபதியென்கின்ற பிர்மவிருஷி வேதமரிஷியைநோக்கி; நீ ஸ்திரிபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லவோவென்று தூஷணிக்கையிலே, வேதமரிஷியும்; பிரசாபதி பகவானைப் பார்த்து நீ ஒரு புறாவென்னும் பக்ஷியாய் நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்க, பிரசாபதியும்; ஒரு புறாவாய்ப்போய் பலவிடத்திலும், நரமாமிசம் புசிக்கையிலே யொருநாள் மாமிசந்தேடிச் சோழதேசத்திலே ஒருராசா நியாயதிஷ்டனா யிருக்கிறவிடத்திலே யிந்தப் புறாவாகிய ரிஷியும் போய் ராசாவைப்பார்த்து எனக்கு அதிக தாகமாயிருக்கிறது சற்று நரமாமிசம் இடவல்லையோவென்ன; ராசாவுமுனக்கு எவ்வளவு மாமிசம்வேண்டுமென்னப் புறாவும் உன் சரீரத்திலே ஒன்றுபாதி தரவேண்டுமென்ன ராசாவுந் தன் சரீரத்திலே யொன்றுபாதி யரிந்திடப் புறாவுக்கு நிறையப் போதாமல் சர்வமாமிசத்தையுமரிந்திட்டு ராசாவுஞ்சோர்ந்துவிழ, இந்தப் புறாவாகிய பக்ஷியும் நமக்குத்தன் சரீரத்தை யரிந்திட்டுப்பிழைப்பித்த ராசா சரீரம்பெறும்படி யெங்ஙனேயென்று விசாரிக்குமளவில், பரமேசுவரனொழிய வேறில்லையென்று சிரபுரத்திலேவந்து; பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்க பரமேசுவரனுந் திருவுளத்தடைத்தருளத் தம்பிரானே! அடியேன் தாகத்திரத் தன்சரீரத்தை யரிந்திட்ட ராசாவுக்கு முன்புபோல வுடலும் பிரசாதித்து அடியேனுக்குமிந்தச் சாபதோஷம்நீக்கவேண்டுமென்று



விண்ணப்பஞ்செய்ய, ராசாவுக்குச் சரீரமுங்கொடுத்துப் புறவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமு மாற்றியருளப் புறவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாகவெழுந்தருளி யிருந்தனை.

முந்நீர்த் துயின்றோ னுன்முகனறியாப் பண்பொடு நின்றனை - என்றது, ஆற்றுநீர், வேற்றுநீர், ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட முந்நீராகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயணனும், நாலு முகத்தினையுடைய பிர்மாவு மடியு முடியுந் தேடற்கரிதாய்நின்ற பண்பினையுடையையா யெழுந்தருளி யிருந்தனை.

சண்பை யமர்ந்தனை - என்றது, துர்வாச மஹாரிஷி யாசிரமத்தே கிருஷ்ணவதாரத்திலுள்ள கோபாலப்பிள்ளைகளெல்லாமிந்த ரிஷியை அசங்கதித்துத் தங்களிலே யொருவனைக் கெர்ப்பிணியாகப் பாவித்துச்சென்று; இவன்பெறுவது ஆணோ பெண்ணோவென்று அந்த இருஷியைக் கேட்கையாலே; அவர்கோபித்து இவன்பெறுவது ஆணுமல்லபெண்ணுமல்ல வுங்கள் வமிசத்தாரையெல்லாஞ் சங்கரிக்கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக்கடவதென்று சபிக்கையாலே; அவன் வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்கை விழ, அந்தச் சேதியைக் கிருஷ்ணன்கேட்டுத் துர்வாசமகாரிஷிசாபங் கேவலமல்லவென்று அந்த இருப்புலக்கையைப் பொடியாக அராவி, அந்தப் பொடியைச் சமுத்திரத்திலேபோட்ட, அராவுதலுக்குப் பிடி[illegible]த ஒரு [illegible]ப்பம்விதைப் பிரமாணமுள்ளவிரும்பை ஒருமீன் விழுங்கி ஒரு வலைக்காரன் கையிலேயகப்பட்டது, அதின் வயிற்றிற் கிடந்த இரும்பைத் தன்னம்புத் தலையிலேவைத்தான். மற்றுஞ் சமுத்திரத்திற்போட்ட இரும்புப்பொடிகளெல்லாம் அலையுடனேவந்து கரைசேர்ந்து சண்பையாக முளைத்துக் கதிராய் நின்றவிடத்திலே; கோபால்குமாரர்கள் விளையாடி வருவோமென்று இரண்டு வகையாகப் பிரிந்துசென்று அந்த சண்பைக்கதிரைப்பிடுங்கி யெறிந்துகொண்டு அதனாலேபட்டு விழுந்தார்கள். இதைக் கிருஷ்ணன்கேட்டு; இதனாலே நமக்கு மரணமுமிருக்குமென்று விசாரித்து ஆலின்மேலே யொரு இலையிலே யோகாசனமாக வொருபாதத்தைமடித்து வொருபாதத்தைத்தூக்கி யமர்ந்திருக்கிறவிடத்திலே, அந்தமீன்வேடன் பக்ஷி சாலங்களைத் தேடிவருகிறபோது தூக்கிய பாதத்தை யொரு செம்பருந்திருக்கிறதாகப் பாவித்து அந்த அம்பைத் தொடுத்தெய்ய, கிருஷ்ணனும்பட்டுப் பரமபதத்தையடைந்தான்.

இந்த சாபதோஷம், துர்வாச ரிஷியைச்சென்று சலிக்கையாலே யிந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுவரனைநோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனுந் திருவுளத்தடைத்தருள, இருஷியுந் தெண்டம்பண்ணித் தம்பிரானே!

அடியேனுடைய சாபத்தாலே கிருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபாலரெல்லாருஞ் சண்டைபண்ணிச்சாவச் சங்காரப்படுகையாலே, அந்ததோஷமடியேனைவந்து நலியாதபடி திருவுளத்தடைத்தருளி ரக்ஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் துர்வாசரிஷிக்குச் சண்டைச் சாபத்திலுள்ள தோஷத்தைநீக்கிச் சண்டைமுனி யென்கின்ற நாமத்தையுந் தரித்தருளிச் சண்டையென்கின்றதே திருப்பதியாகவெழுந்தருளியிருந்தனை

ஐயுறு ‡மமணரு *மறுவகைத்தேரரு மூழியுமுணராக் காழியமர்ந்தனை - என்றது, வேதாகமபுராண சாத்திரங்களிலுள்ள பலத்தையில்லையென்று *ஐயமுற்றிருக்கின்ற ‡அமணரும், கைப்புப், புளிப்புக், கார்ப்புத், துவர்ப்புக், கூர்ப்புத், தித்திப்பு என்கிற ஆறுவகை ரசங்களையுமுச்சிக்குமுன்னே புசிக்கிறதே பொருளென்றிருக்கிற *புத்தருமூழிகாலத்துமறியாமல், மிகவுங் காளிதமான விஷத்தையுடைய காளியென்கின்ற நாகம் பூசிக்கையாலே சீகாழி யென்கின்றதே திருப்பதியாகவெழுந்தருளியிருந்தனை.

எச்சனே ழிசையோன் கொச்சையை மேவினை - என்றது, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவேழிசை (குரலாவது - சங்கத்தொனி, துத்தமாவது - ஆண்மீன்பிளிறு கைக்கிளையாவது - குதிரையின்குரல், உழையாவது - மானின்குரல் இளியாவது - மயிலின்குரல், விளரியாவது - கடலோசை, தாரமாவது - காடையின்குரல், என்னும் நாதங்களையு மெய்தினை, மகத்தான இருடிகளுளெல்லாரிலும், விருத்தராயுள்ள பராசரப் பிரமரிஷியானவர் மற்றரிஷிகளெல்லாரையும் நோக்கி; நீங்கள் சமுசாரிகளொழிய விரதத்தை யனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களைத் தூஷிக்க அவர்களும் நீமச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமு முன்னைப்பற்றி விடாமலனுபவிப்பாயென்று சபிக்கையாலே, அந்தச் சாபத்தின்படியே மச்சகந்தியைப் புணர்ந்து; அந்தத் துர்க்கந்த மிவனைப்பற்றி யொரு யோசனைதூரம் துர்க்கந்திக்கப்படியாலே யிதைபோக்கவல்லவர் பரமேசுவரனையொழிய வேறில்லையென்று சீகாழியிலேவந்து பரமேசுவரனை அர்ச்சிக்கப்; பரமேசுவரன் உனக்கு வேண்டினதென்னவென்று கேட்கத் தம்பிரானே! அடியேனைப்பற்றின துர்க்கந்தத்தை விலக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய தம்பிரானு மிவனென்ன கொச்சை முனியோவென்று திருவுளமாயிவன்மேற் பற்றின துர்க்கந்தத்தையும்போக்கிச்சுகந்தத்தையும் பிரசாதித்தருளிக் கொச்சையென்கின்ற சுந்தர நாமத்தையுந் தரித்தருளிக் கொச்சையென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை.

ஆறுபதமு மைந்தமர் கல்வியு மறைமுதனான்கு மூன்று காலமுந்



தோன்ற நின்றனை - என்றது, பிரத்தி, பிரத்தியாகாரம், தல்லியம், தல்லியாதீதம், வித்தை, அவித்தை யென்கின்ற ஆறுபதங்களும் ஆச, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம் என்கின்ற ஐந்து கல்வியும், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களும் செல்காலம், வருங்காலம், நிகழ்காலம், என்கின்ற மூன்று காலமுந் தோன்ற நின்ற மூர்த்தியாயினை.

இருமையி னொருமையும் - என்றது, சத்திசிவங்களாயிருக்குள்ள இரண்டுமொன்றாய் அர்த்தநாரீசுவரமாயிருக்குள்ளதை,

ஒருமையின் பெருமை - என்றது, தானேயொரு எல்லையில்லாத சிவமாயிருக்குள்ளதை;

மறுவிலா மறையோர் கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை கழுமல முதுபதிக் கவுணிய னறியும் - என்றது, மறுவற்ற பிரமவமிசத்திற்றோன்றித் தீக்ஷைகளாலே மலத்தைக் கழுவப்பட்ட கவுணியர் கோத்திரத்திலேவந்த சீகாழிப்பிள்ளை கட்டுரையை விரும்பிக் கழுமலமென்கின்ற முதுபதியிலே யெழுந்தருளினை. கம்மென்கின்ற பிரம சிரசிலே யுண்கின்றவனே அறியுமென்றது.

அனைய தன்மையை யாதலின் - என்றது, அத்தன்மையாகிய வியல்பினையுடையை யாதலின்

நின்னை நினையவல்லவரில்லை நீணிலத்தே - என்றது, நின்னை நினைக்கவல்லார்களுக்குப் பிறப்பில்லை யெனவும், நின்னை நினையவல்லவரில்லை நீணிலத்தே; நின்னை நினைக்கவல்லவ ருலகத்திலொருவருமில்லை யெனவும் போதரும்

---

* குணத்தைப் பொருளெனக்கொண்டவன் சமணன், புத்தியைப் பொருளெனக்கொண்டவன் புத்தன், தேகத்தைப் பொருளெனக்கொண்டவன் உலகாயதன் இப்படி இன்னும் பலருள.

உலகாயதன் முதலிய பாசஞானிகள் பாசகாரியங்களாகிய தேகம், புத்தி, குணமுதலிய பொருள்களையன்றி வேறு ஆன்மாவாவது, பரமான்மாவாவது உண்டென்று கொள்ளாமையாலும், மாயாவாதி முதலிய பசுஞானிகள் ஆன்மாவாகிய தன்னையும், சூரியன் முதலிய வேற்றுப் பசுக்களையுமன்றி; வேறு பரமான்மாவுண்டென்று கொள்ளாமையாலும் யாவரும் பதியை யிழந்தவர்களேயாவர். தேகவாதிமுதல் பாஞ்சராத்திரிவரையில் அமங்கலம் பெற்றியங்கலால்; அவர்களியாவரும் நாஸ்திகருமாவர். தேகமே ஆன்மாவெனக்கொண்டு தேகத்துக்கு வேறுயுள்ள ஆன்மாவையும் கடவுளையுமில்பொருளாகத் துணிந்தமையால் தேகாத்மவாதியாகிய

உலகாயதன் அவற்றையுண்டென்பானை நோக்க நாஸ்திகனாவன்; இவனில் கொஞ்சம் பிராக்ஞனாய் இந்திரிய முதலிய பொருள்களைத் தேகத்தினிடமாய்க் கண்டமையால் சமணாதிகள் நாஸ்திகருள்; பாசஞானதல்லராவர். ஆன்மாவையே கடவுளெனக்கொண்டும், பிற ஆன்மாக்களையே கடவுளர்களெனக்கொண்டும், அவர்களுக்கு வேறாயுள்ள பரமான்மாவாகிய பதிப்பொருளை இல்பொருளாகத் துணிந்தமையால் ஆன்மவாதி முதலியவர்களும் பதிப்பொருளொன்று வேறு உண்டென்பானைநோக்க நாஸ்திகராவர்.

இவர்கள் பதிஞானிகளை நோக்க நாஸ்திகரேயன்றிப் பாசஞானிகளை நோக்க ஆஸ்திகரேயாம். இவர்கட்கு ஆஸ்திகத்வம் பாசஞானிகளை நோக்க உண்டாதலால் அவரோடொருங்கு சேர்த்து; நாஸ்திகர் என்னும்பெயர் வழங்குத்தன்மை யொழிந்தது.

ஆத்மா இல்லையென்பவனும், கடவுளில்லையென்பவனும், ஆத்மாவாகிய தானே கடவுளென்பவனும், பிறவான்மாக்களே கடவுளர்களென்பவருமாகவே, ஒவ்வொரு மதத்தவரும் ஒழிதலால்; அநீச்வரவாதிகளாகிய அன்னோர்க் கப்புறப்பட்டவனும்; பதிஞானியென்னப்பட்டவனுமுள்ளவனொருவனுளன்.

பரமபதியாகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களிற் பெறப்பட்ட வுண்மைஞானம் சத்திநிபாதத்திற்கே வுரித்தாம். உலகோர்க்கோவெனின், பாசபசுஞானங்கள் நித்தியம். ஆகமூவகைப்பட்ட ஞானங்களுள்; சத்திநிபாதத்திற்குரித்தாகிய வுண்மை ஞானமே பதிஞானமென்னப்படும். இம்மூன்றனுள் தேக முதலிய பாச காரியங்களைத் தனித்தனிப் பொருள்களெனக்கொள்வது பாசஞானம் அப்பாசத்திற் பிணிப்புண்டு மயங்கும் பசுவைப் பொருளெனக்கொள்வது பசுஞானம்,

இயற்கையே பாசமில்லாததாகிய வொருபொருள் இவ்விரண்டிற்கும் வேறாயுள்ளதெனக்கொள்வது பதிஞானம் எனவே; விகாரித்துவத்த பாசகாரியங்களுக்கும், பசுக்களுக்கும் வேறாகப் பதிப்பொருளொன்று வேறுகண்டவனென்பது நிச்சயிக்கப்பட்டது. அப்பதிப்பொருள் சம்புசப்தவாச்சியனாகிய சிவபெருமானே யென்பது சமஸ்தவேத நிச்சயமாகையால், அப்பரசிவ சம்பந்தத்தால் சைவனென்னப்படுவோனே பதிஞானியாதல் திண்ணம். தேகம், இந்திரியம், பிராணன், கரணம் முதலாகிய பாச காரிய பந்தனும், சித்ரூபனுய் விளங்கும் பசுவைப்பொருளெனக்கொண்டவன் மாயாவாதி இவனே; உண்மை வேதாந்தியெனவும், அத்துவிதி யெனவும் அறியாதார் கூறுவர்.

—(1)—



## சைவசமய சாதன வுண்மை தர்ப்பணம்.

——(§)——

" சைவ சமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளிக் காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறிப் புகுதவேண்டாம் முத்திதருந்
தெய்வச் சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே "

எனுந் தாயுமான சுவாமிகள் திருவாக்கின்படி, சைவசமயத்திலே எல்லாவுயிர்களும் பரமசிவனாற் படைக்கப்பட்டனவென்றும், அவ்வுயிர்களை அன்புடன் நேசித்து ஆதரிக்கவேண்டுமென்றும், அவ்வன்பு யாரிடத்தில்லையோ அவர்கள்; எவ்வித தவம், தானம்; பக்தி, ஆசாரமுடையவர்களாயினும், சிவம் என்னும் முழுமுதற்பொருளின் அருளை; எவ்வகையானும் அடைதற்கடாதென்றும், ஒவ்வொரு சீவர்களும் ஆன்மநேயச் சகோதரர்களென்றும், சகலஜீவராசிகளும் எல்லாம்வல்ல இறைவனுக்குத் திருக்கோயில்களாமென்றும் அறிவுறுத்தற்காதலாக;

" எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலக்குமுயி ருடலனைத்தும் ஈசன்கோயில் " எனவுரையறுத்துரைக்கப்பட்டது, இத்தகையக் கடவுளாகிய பரமசிவத்தையீண்டு சிவாகமத்தின்படி யெடுத்தாராயுங்கால்,

மண்டலப்புருடன்.

" மடையிலா ஞானத்தோடு காட்சி வீரியமேயன்பு
மிடையுறு காமமின்மை விசித்ர கோத்திரங்களின்மை
அடையிலா வாயுவின்மை யந்தரா யங்களின்மை
உடையவன் யாவன்மற்றிவ் வுலகினுக் கிறைவனாமே " இது ஆஸ்திகலட்சணம்.

—|•|—

ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள். பொருள்வணக்கம்.

" சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத் தன்மை நாமமேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ் செய்யுஞ், சோதியைமாத் துவெளியை மனதவிழ நிறைவான துரியவாழ்வைத், தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச் சிந்தை செய்வாம் " எனவும்,

ஆகாசபுவனம் - சிதம்பர ரகசியம்.

" ஆதியந்த மெனுமெழுவா யீறற்றொன்றி யருமறைத் தின்னமுங் காணாதற்றானை, பேதமதங் களுமலைய வதுபோல் வாதப் பெற்றியகும்

வாய்வாதப் பேயராகச், சாதகமோனத்திலென்ன வடவானிழற் றன்னருட் சந்திரமௌலி தடக்கைக் கேற்க, வேதகசின் மாத்திரமா யெம்மனோர்க்கும் வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே" எனவும்,

ஆகையெனும்

" குலமிலான் குணங் குறியிலான், குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்து
மலமிலான் மைத்தர் மனைவியில் லானென வனஞ்
சலமிலான் முத்தி தரும்பர சிவனெனத் தருமே"

சிவாகமத்தெளிவுரை.

(உஅ) வது வாக்கியம்.

பிரபஞ்சத்திலுள்ள சருவமும், பரமேசுவரனால் வியாபிக்கப்பட்டிருக்கின்றது ஆகையால் விஷய விருப்பத்தைவிட்டு பிரமானந்தத்தை யனுபவிக்கவேண்டும்.

(௩௰) வது வாக்கியம்.

பரமேசுவரன் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்றார், ஸ்வயம் பிரகாசர், நிர்வயர், சரீரமில்லாதவர், நிர்மலர், பாபரஹிதர், எவைக்கும் மேலானவர், இவர் சத்தியத்தாலும் தபசாலும், சுத்தியானத்தாலும், இந்திரிய நிக்கிரஹத்தாலும் அடையப்படத்தக்கவர், ஜோதிமயனாயும், பரிசுத்தனுயுமிருக்கும் அவரை; குற்றமற்ற யோகிகள் தம்மில் தரிசிக்கின்றார்கள். உயர்வான தியானத்தால் சுத்தசித்தத்தால் தியானிப்பவர்கள் நிரவயவரான அந்தப்பரமேசுவரனைக் காணக்கூடும். அஞ்ஞானிகளுக்கு அசைகிறவர்போலும், ஞானிகளுக்கு அசைவற்றவர்போலுமுள்ளவர்.

ப்ரமாதிப்தக சுலோகம்.

" ஸையோஹ் வைதத்ச்யாம ஸரீர முலோஹிதம் "

சாயையும், சரீரமும், வர்ணமுமில்லாததும் சுகமான சுஷுப்திக்கு மிஞ்சின சுகமானதும், இராசுகங்களைக் கோருததும், ஆனந்தமே சுவரூபமானதும்,

" ஆநந்தோ ப்ரஹ்மா " ஆனந்தமே சிவமாதலால், அனாத்மாவான இத்தேகம் தானன்று. இத்தேகத்துக்கு, விலட்சணமான சச்சிதானந்தமாகிய ஆன்மாவே தானென்று யாரறிபவரோ அவரே ஜீவன்முத்தராம். இதுவே சாங்கியமெனப்படும்.

முண்டகோபநிஷத்து ௩ - வது அத்தியாயம்.

அவர் கண்களாலாவது, வாக்கினாலாவது, மற்ற இந்திரியங்களா





லாவது, தபசினாலாவது, கருமத்தினாலாவது கிரகிக்கப்படமாட்டார். அவரருளிய பிரசாதமான ஞானத்தினாலே சித்தசுத்தியை யுடையவன் தியானித்துக்கொண்டே நிரவயவமான பரமேசுவரனை யறிகிறான்.

கேநோபநிஷத்து ௰௧ - வது வாக்கியம்.

அந்தப் பரமேசுவரனை; அறியேன் என்பவன் அறிவான்
தெரியாதென்பவர்களுக்குத் தெரியும்
அறிவேன் என்பவன் அறியான்
தெரியுமென்பவர்களுக்குத் தெரியாது

மாண்டூக்கியோபநிஷத்து, எ - வது வாக்கியம்.

அந்த பிர்மமானது, சுவப்னவஸ்தையை யுடையது
(தைஜஸன் என்கிற ஜீவனல்ல)

ஜாக்கிர அவஸ்தையையுடையது (விசுவனென்கிற ஜீவனல்ல) ஜாக்கிர சுவப்னங்களுக்கு மத்தியமான அவஸ்தையையுடையதுமல்ல, நித்திராவஸ்தையை யுடையது, பிராக்கிய னென்கிற ஜீவனுமல்ல, இம்மூன்றவஸ்தைகளிலுள்ள வஸ்துக்களை ஒரேகாலத்தில் அறிகிறதுமல்ல, ஜடமுமல்ல, பார்க்கக்கூடியதுமல்ல, நிரூபித்துக் காட்டத்தக்கதுமல்ல, கருமேந்திரியங்களால் கிரகிக்கத்தக்கதுமல்ல, மனதினால் அறியத்தக்கதுமல்ல, நினைப்புக்கெட்டினதுமல்ல, வாக்கினால் (வேதங்களால்) அறியத்தக்கதுமல்ல (ஆனாலோ) குருசுவாநுபவத்தினாலேயே யறியத்தகுந்தது.

ஜாக்கிரம் முதலிய அவஸ்தையுற்றது, விகாரமற்றது, மங்களகரமானது அது; ஸஜாதீயபேதம், விஜாதீயபேதம், சுவகதபேதம் என்னும் மூன்று வித பேதங்களற்றது. (ஸஜாதீய:) பேதமற்றதென்றால், தன்னைப்போல் சேதனமான வேறுவஸ்துவை யுடையதல்லாதது. (விஜாதீய:) பேதமற்றதென்றால், தன்னைத்தவிர வேறு ஜடவஸ்துவை யுடையதல்லாதது.

சுவகத: பேதமற்றதென்றால் அவயவமற்றது, இப்படிப்பட்டதை (துரியமென்கிற) நாலாவதாக எண்ணுகிறார்கள் ஏன் எண்ணுகிறார்களென்றதினால் வாஸ்தவமல்லவென்றுகின்றது. ஏனென்றால்; மூர்த்தியவைகளான ஜாக்கிரம் முதலிய மூன்றவஸ்தையும், வாஸ்தவமானாலல்லவா இதை நான்காவது அவஸ்தையாகச் சொல்லக்கூடும். அந்த மூன்றவஸ்தையும், வாஸ்தவமல்லவாகையால்; துரியாவஸ்தையும், வாஸ்தவமல்ல இதுதான் ஆத்ம சுவரூபம், இதைத்தான் அறியவேண்டியது.

கடோபநிஷத்து.

(௬ - வது வல்லி, ௯ - வது வாக்கியம்)

இந்த பிரம்மத்திற்கு ரூபம் (நமது பார்வையிலில்லை) இதை ஒருவ

னுங் கண்ணுக் பலக்கிறதில்லை, நிச்சய ரூபமான யதார்த்த ஞானத்தி னுலே அறியப்படுகிறது. இதையறிந்தவர்கள் அமிருதத்துவத்தை (மோட்சத்தை) யடைகிறார்கள்.

பிரசிநோபநிஷத்து.

ஈ - வது பிரசினம் ழ - வது வாக்கியம்.

எவன் அந்த (பிரமத்தை) நிழலற்றது, சரீரமற்றது, வருணமற்றது ஒளியுள்ளது, அழிவற்றது என்று அறிகிறானோ அவன் சகலத்தையும் அறிந்தவனாகவும், சகலமுந் தானாகவுமாகிறான். இந்த வாக்கியங்களினாலும், பின்னுமநேகப் பிரமாணங்களினாலும், பிரமமாகிற ஆத்மசுவரூபம் இந்திரியங்களுக்குப் புலப்படாதென்றேற்படுகிறது. ஆத்ம சுவரூபப் பிரகாசமுண்டாகிறதற்கு உபாயமேதுவெனில்; இந்திரியங்களை மனதடனடக்கிக்கொண்டு ஒரே நிலையிலிருக்கிற சமாதிதான்; ஆகையால்; ஒவ்வொரு முழக்ஷுவும் எமாத்தவனும் வீண்காலம் போக்காமல் ஆத்ம சுவரூபக்ஞானமடைய முயலவேண்டும். இந்த அர்த்தத்தையே சுருதி சொல்லுகிறது.

கடோபநிஷத்து.

ஈ - வது வல்லி, ய௪ - வது வாக்கியம்.

(அக்ஞான வுறக்கத்தினின்றும்) விழித்து எழுந்திருங்கள் சிரேஷ்டமானவர்களை யடைந்து பிரம ஞானத்தை சம்பாதியுங்கள் (ஏனெனில்) அதை அறிந்துகொள்ளும் வழியானது; வெகு கூரான கத்தியின் முனையில் நடப்பதுபோல வெகு கடினமானதென்று சான்றோர் சொல்லுகிறார்கள்.

கேநோபநிஷத்து,

உ - வது கண்டம் ரு - வது வாக்கியம்.

எவேந்த இப்பிறப்பில் இந்தவுண்மை ஞானத்தை யறிந்துக்கொண்டால் பிறகு நிலையுண்டாகும், இப்பிறப்பில் அறியாவிட்டால், பெரும் நஷ்டமுண்டாகும், பூதங்கள்தோறும் பிரம்மத்தைதக்காணும் தீரர்கள் இவ்வுலகைவிட்டு நித்தியபதவியை அடைகிறார்கள்.

ஆத்ம சுவரூபத்தை கிரகிக்கிற விஷயத்தில்,

சாத்துவிக புத்தியுடன், காரிய காரணமான அந்தக்கரணத்தை மனவச கனாதிலப்படுத்திக்கொண்டு, சரீர சம்ரக்ஷணைக்காகத் தன்னுடைய பிரயத்தினமன்றிக் கிடைத்த அன்னபானாதிகளில்; ருசியினாலாசையும், அருசியினால் துவேஷமும் இல்லாதவன் தன்னுடைய நிஷ்டைக்கு விரோதமில்லாத பரிசுத்தமான இடத்திலிருக்கிறவன், வாக்கு, தேகம்,



மனசுகளைத் தியானத்திற்கு அனுகூலமாய்ச் செய்துக் கொண்டவன், அபோக்கியமான விஷயத்தில் உபயோகிக்காதவன், தேகமுடிவுவரையில் பிரதிதினமும் ஆத்மஸ்வரூப சிந்தனையானது தியானம், அதிவிடைவிடாமலிருப்பது யோகம், இவைகளில் விருப்பமுள்ளவன், ஞானயோகத்தில் விருப்பமுள்ளவன்; காணப்படுகிறதும், காணப்படாததுமான வஸ்துக்கள் விஷயத்தில் ஆசையைவிட்டவன், தியானிக்கத்தகுந்த வஸ்துவைத் தவிர மற்ற வஸ்துக்களில் வைராக்கியத்தை; நாளுக்குநாள் விருத்திசெய்துக்கொண்டவன் இந்த ஞானத்த போகத்திற்கு அருகனாகி அதன் பலனையடைகிறான்.

சாந்தோக்கிய உபநிஷத்து ௬ - வது அத்தியாயம்,

சிறிய வித்துக்களால் பெரிய விருக்ஷமான ஆலமரமுண்டாகின்றதைப்போல அணுவான கன்மத்தினால் சன்மமாகிய தேகமுண்டாகின்றது இதனாலுண்டாகின்ற பிறவியெனுங் கடலாகிய கன்மத்தை, சலத்தில் கரையப்பட்ட உப்பைப்போல, குருவுபதேசத்தினாலுண்மையறிந்து அந்நேரமுண்டாகுஞ் சுவானுபவ பக்குவத்தினால் கன்மத்தையொழித்து ஜீவமுத்தனாதல்வேண்டும் என்னும் வேதாந்த சாராம்சங்களை சுருக்கமாக பன்னிரண்டு வருடம் வேதாத்தியயனஞ்செய்த சுவேதகேது என்பவனுக்குத் தனது தந்தையாகிய உத்தாலகரால் உபதேசிக்கப்பட்டது.

இதையாதரித்தே;

ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள்,

சொல்லாப் பொருளை நினையாதே நின்னையுன்னோர்
சொல்லாப் பொருட்டினைச் சொல்லாதே—கல்லாத
சிந்தை குழைந்தகஞ் சேரக் குருவருளால்
வந்தவழி நல்ல—வழி.

நிறைந்திடத்தா னீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதை முயல்வார்—பிறையணிந்த
மிக்க கயிலாயமலை வித்தகனே வேதியனே
செக்கரணி மேனியனே—செப்பு. என உடல்பொய்யுறவிலும்,

" அறியுந்தரமோ நானுன்னை யறிவுக்கறிவாய் நிற்கையினால், பிறியுந்தரமோ நீயென்னைப் பெம்மானே பேரின்பதாய்ச், செறியும் பொருணின்னையன்றிச் செறியாப் பொருளன் பெரும்பேற்றை, தெரிந்தின்றே ரூமுக விசாரித்தா னினக்கோவில்லை யெனக்காமே " எனத் தன்னையொருவர் என்பதிலும் [illegible] யுரைத்தருளினார்.

## சிவாநுகூல பாரம்பரிய த்வனி.

—(‡)—

பரமசிவனாருளிய வேதங்களும், இருபத்தெட்டாகமங்களும் முதல் நூலாகும், தமிழ் மொழியில் இதைத்தழுவியுள்ளது. பன்னிருதிருமுறையும், பதினன்கு சித்தாந்த சாஸ்திரங்களுமாம்.*

ஸ்ரீமத் - திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள், ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள், ஸ்ரீமத் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம் ஏழுதிருமுறை ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை. சேந்தனர் முதலிய ஒன்பதின்மர் செய்தருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந்திருமுறை, திருமூல நாயனாருளிய திருமந்திரம் பத்தாந்திருமுறை திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், நக்கீரர், கபிலர், பரணர், சேரமான்பெருமான் நாயனர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள், முதலிய பன்னிருவர்கள் செய்தருளியது பதினோராந் திருமுறை. ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் செய்தருளியப் பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாகும்.

சிவஞானபோதம், மெய்கண்டதேவர் சிவஞானசித்தியார், இருபா இருபஃது அவர் மாணக்கர் அருணந்தி சிவாசாரியார் உண்மை விளக்கம், திருவதிகை மனவாசகங்கடந்தார் திருவுந்தியார், திருவியலூர் உய்யவந்ததேவ நாயனர் திருக்களிற்றுப்படியார் திருக்கடவூர், உய்யவந்ததேவ நாயனர், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம், உமாபதி சிவாசாரியர் இவர்கட் செய்தவை பதினன்கு சித்தாந்தமாம்.

ஸ்ரீமத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் நால்வரும் சமய குரவர் அல்லது ஆசாரியர்களெனப்படுவர்.

மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவமாகிய நால்வரும் சந்தான குரவர்களெனப்படுவர்.

பிரம சூத்திரத்திற்கு சைவாத்வைத உண்மைப்பொருளைக்கொண்டு பாஷ்யஞ்செய்தருளியவர் நீலகண்ட சிவாசாரியார்; அவர் மற்றெல்லா பாஷ்யக்காரர்களுக்கும், சந்தான குரவர்களுக்கும் முற்பட்டவர்.



இச்சைவ சமயமானது மற்ற சமயங்களைப் பொய்யெனத் தள்ளாது எல்லா சமயங்களையும் சோபானமுறைப்படி தன்னுளடக்கிச் சர்வசமயசாரமாயும், சமரசமாயும் நிறைந்துள்ளது.

பதியாகிய கடவுளுக்கு ஓர் நாமமும், ஓர் உருவமும் ஒன்றுமில்லாதிருந்தும்; பலகோடி நாமமும்; உருவமும், அதற்குரிய லக்ஷணார்த்த தத்துவமுறைமைகளும் கேட்கப்படினும், சிவசிவனென்னும் ஆன்மாக்களாகிய பசுக்கள் கடைத்தேறவான் வேண்டி இரங்கி அன்பவிருளைத் துடைத்து சிவபோகமாகிய இன்பத்தைக்கொடுத்து இரட்சிக்கவல்லக் கருணாநிதியும், அன்பே! சொரூபமாகவும், சத்தியம், சாந்தம் என்பதே குணமாகவும் உடையதாதலால்; குருமுகத்தினால் அவையுணர்ந்து, சுத்தபோதம், கன்மம், அல்லது கிரியை முதலான விஷயார்ப்பூணத்துக்கிடந்தாது அதனால்; மனத்தளராது தொம்பதங்கடந்து, தெய்தபதத்தினிலையுற்றிருத்தலைக்காட்டி (சனகாதியர் நால்வருக்கும் கல்லாலடிக்கீழ்) தட்சணா மூர்த்தியாகவும், வாதவூரடிகளாகிய மாணிக்கவாசகர்க்கு திருவாசகமென்னும் தமிழ்வேதத்தை எழுதியருள குருமூர்த்தியாகவும், இன்னுமளப்பரிய காரணதேகம், காரியதேகம், சூக்ஷமதேகம், விதேகதேகம், பரபோகம், பரகியானம், முமூட்சுவிலக்கணம், பரமசமூத்தியோசாதனம் சத்தியோசாதனம், சொரூபாலங்கார அழகானந்த ரூபியாய்க் கண்டும், கேட்டும், கலந்தும், அளவளாவிய மஹாதேவனும் கற்போல் ஓர் தாயினிடமாகக் கற்பவாசைதயுறப் பிறந்தும், சிலகாலிருந்தும், பலபலச் செயலால் மயக்குவித்து (பிறந்தான் இறந்தானென்ற சொல்) கன்மவயத்தினர்க்குள்ளதாகக் காண, கேட்க யேற்படுவதனுபவமாதல்போல், அந்தகைய அழிவுள்ளதாக முக்காலத்து மெவ்வவசரத்து மேற்படுவதின்றி; அல்லது அவ்வணமுண்டாகும்படி யேற்படுத்துவதர். அதாவது; உண்டுபண்ணுவாரொருவருமில்லாது உலகவுற்பவமுதலிறுதிகாலத்துஞ் சருவஞானப்பிரிய சம்பன்ன சருவகல்ப, எல்லாத்தோற்றமொக்கமாய் யாவையுஞ் சிருஷ்டித்து அதனைதன் சன்மதன்மத்தைப்போல சகாசகத்தையருளி வேண்டுவனவொன்றில்லாது பொன்னின் ஒளிபோன் றிலகும் பராமேஸ்வரனும் நிற்பானெவனோ? அவனேயே; தேவர்முதலியாவரும் வருந்தி வணங்காநிற்பர். அப்பரம்பொருளே பலபல வடிவமாக (பிள்ளையைக் கார்க்குந் தாயைப்போல) அளவிறந்த ரூபமுடையவனாக யெழுந்தருளுவன், அதனந்தரங்கமான பரமதந்திர, பரமரகசியமானதை; ஏகாந்தமனத்தராய் சிஞ்சிற்றும் பேதமென்னும் வினைசுட்டிராதப் பெரியோர் அதிதபாவனையினாற்கண்டு (கரும்பில் தித்திப்பு) சொந்தமாதற்போல் அச்சிவத்தோடு கலந்து ஆனந்தித்து நித்யராகவிருப்பர். அவ்வித அரும் பெ

ளும் கருணையுடையவரும், யேனையோர் யாதொருபயனும் வேண்டாது உயிர்ப்பிறைக்க மழையைப்பொழிந்து ஆதரிப்பதற்கு நிகராக ஆன்மாக்களாகிய பசுக்களென்னுஞ் சேர்களிடத்து யாதொருதவியும்பெறுது வரையாது கொடுக்கும் வள்ளலா யெவ்வுயிரிடத்து மெவ்விடத்து மொருபடித்தாயினிது விளக்கலால், அவரையே சர்வமங்கள சொரூபராய் சிவம் என்னப்பட்டப் பேருடையாராக புண்ணியவசத்தின்படி யாவரும் வந்தனைவழிபாடு செய்தற்குரியராவர்.

ஆதலால்; உலகினிடமாகச் செய்கைப்படுகின்ற எல்லா தெய்வகாமங்களினுஞ் சிறந்ததாவ் பெரியோர்களால் சொல்லப்படும்.

சிவம் என்பது அருபமும், சிவன் என்பது ருபமும் உடையதாதலால் இவ்விரண்டும் ஒருமுகக்கினவி, இவ்வொன்றையே அருட்காட்சி பொருட் காட்சியெனக் கண்டார்கள். பலகோடி நாம ரூபங்களுடன் நூறலங்கார இலக்கணமெனும் இலட்சணத்தை ஆயிரத்தெட்டு, நூற்றெட்டு, ஐம்பத்தொன்று, ஒன்பது, எட்டு, ஏழு, ஐந்து, மூன்று, இரண்டு ஒன்றாகக் கூறி, முடிவிலவை யொன்றுமின்றி சூனியமாக வெறும்வெளியாகவும் பிரஸ்தாபிப்பர். அவையாய்ந்தோர் (பேசா மௌனம் பிரம்ம வித்தையே பிரமவித்தையிற் பெரியோரிருப்பர், இருப்பதைக் கண்டா லிறவாதவரே, இறவா வடிவம் ஈசனுடையதே, ஈசனைக் கண்டா லிருவினை யொழியும், இருவினையற்ற லேமன்னுகானே எமனை யுதைத்தவன் ஈசனேருவனே, என்ற (சௌமியபாடியத்திற் கடலாடைமலபரிபாகம்) என்ற எழாம்வல்லி ௬௭-வது ஸ்லோக வாக்கியப்படித் தெளிந்து யாதொரு பற்றுமில்லாது எல்லாஞ் சிவமயமேயென்ன சதா வழிபவர்.

—(§)—

சிவமானது சரிதை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற நான்கு படித்திறமான சாதனையிலே;

வள்ளலார் சாத்திரம். ஞானவிளக்கம் - ௬௭ - வது கவி

“ சரிதையிலே யீசன் உடலுடைய னாய்நின்றுன்
கிரியையிலே மந்திரத்திற் கட்டி—யருகிருந்தா
னுனையிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றுன்
ஞானமதி லுளவி—லுன் ”

சிவாகமக் கச்சிமாலே. (௰ - வது கவி

“ எல்லாஞ் சிவமெனு நன்மறையாகம மெக்கலையு, மெல்லாஞ் சிவமென் றெழிற்குரு வாய்வந் தெடுத்திசைத்து, மெல்லாஞ் சிவமெ





லெங்கெவர்கோட்கு மிசைத்திருந்து, மெல்லாஞ் சிவமென் றனைநில லென் கச்சியேகம்பனே ” எனவும், “ ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிகா லந்நவிர வாஞ்சைப்ப லறிவிற் செம்புத்தேனை முடவனிச்சித்தபடி யாருமதி வவிழவின்பம், தாக்கும்வகை யேதுநாட் சரியை கிரியாயோக சாதனம் விடுத்ததெல்லாஞ் சன்மார்க்கமல்ல” எனத் தாயுமானுர் கருத்தைப்போன்ற உண்மைப்பொருளைவிறந்ததுண்டென கற்றவல்லுனர்முதல் குருசிஷ்ய பாரம்பரிய முடையவர்களாலும் நிச்சயிக்கப்படும். இவ்விதம், சித்பானந்த கைவல்ய வைபவத்தை யடைய வேண்டியவர்கள் எவ்வித விரதானுசாரக் கொள்கையினிடமாகத்; தன்னை நத்தஞ்செய்வதாக யேற்படினும், அவைகளுக்கெல்லாந் தலைமைப்பொருளாகவிருந்தத் தன்னையாசிக்கவேண்டியது மனதானதால்; அதனிடமாகவுண்டாகின்ற ராகத்வேஷப் பிரகாணமாயுள்ளதை முதலாவது விசாரித்து அதன்பால் புத்தியைச் செலுத்தாது தடுத்தாற்றலே பின்னுலடையப்போகின்ற எல்லா நன்மைகளுக்கு மாதாரமாகவிருப்பதால் அவற்றைப் பிரகாணமாக விசாரணைச்செய்து உள்ளதை யெடுத்தோதுதலே முக்கியார்த்தமாதலினுல் அதற்றை விளக்குவாம்.

—)•(—

## பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தத்தில்

### ராகத்வேஷப் பிரகாணம்.

——(§)——

எந்த ராகத்வேஷங்களினுலே சகலமானபேரும், ஜனன மரண துக்கப் பரம்பரையுடையவர்களாக விருக்கிறுர்களோ அந்த ராகத்வேஷங்களினுடைய சுவரூபங்களை விசாரிப்போமாக. அவைகள்; ராகம், த்வேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இரட்சியம், அசூயை, டம்பம், தர்ப்பம், அங்காரம் எனப் பதின்மூன்றாகும்.

இந்தப் பதின்மூன்றுக்கும் விபரம்.

—(1)—

(௧) இராகமாவது:—பரஸ்திரீகளைப் பண்ணவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு ராகமென்று பெயர், இதற்குச் சாட்சி இராவணன்.

(௨) த்வேஷமாவது:—தனக்கு யாராகிலும் அபகாரம்பண்ணினுல் அவர்கள்மேல் விரோதத்தைபெண்ணி அதற்குப் பிரதி அபகாரம் பண்ணவேணுமென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு த்வேஷமென்று பெயர், இதற்குச் சாட்சி சகுனியன்.

(௩). காமமாவது:—கிரகம், சொர்ணம், க்ஷேத்திரம், தனம், தானியங்களை யெல்லாம் சம்பாதிக்கவேண்டுமென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்குக் காமமென்று பெயர், இதற்குச் சாட்சி நகுஷன்.

(௪) குரோதமாவது:—தன்பொருளை யாரேனும் அழித்தால் அவர் தன்பேரில் கோபித்து விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு குரோதமென்று பெயர்; இதற்குச் சாட்சி பரசுராமன்.

(௫) உலோபமாவது:—தன்பொருளில் யாரேனும் ஒருகாசு கேட்டால் அதைக்கொடுக்க மனமில்லையென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு உலோபமென்று பெயர், இதற்குச் சாட்சி துரியோதனன்.

(௬) மோகமாவது:—தான் சம்பாதித்த பதார்த்தத்தின்மேல் பிரியமாகிய ஆசாபாசங்களைக்கொண்டு விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு மோகமென்று பெயர், இதற்குச் சாட்சி தசரதமகாராஜன்.

(௭) மதமாவது:—ஐசுவரிய கர்வத்தினாலே நித்யா நித்யந்தெரியாமல் யாரையும் அலட்சியமாக இகழ்வுசெய்து விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு மதமென்று பெயர், இதற்குச் சாட்சி கார்த்தவீரியார்ச்சுனன்.

(௮) மாத்சரியமாவது:—யாரேனும் தன்னிலும் அதிகமான மேன்மைபெற்றிருந்தால் அதைப் பொறாமல் விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு, மாத்சரியமென்றுபெயர், இதற்குச்சாட்சி சிசுபாலதந்தவக்கிரன்.

(௯) இரட்சியமாவது:—தனக்கு வந்த துக்கம் அன்னியருக்கும் வரலாகாதோவென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு இரட்சியமென்று பெயர், இதற்குச் சாட்சி அருணுட்சன்.

(௰) அசூயையாவது:—தனக்குவந்த சுகம் அன்னியருக்கும் வரலாகுமோவென்று விகற்பித்து வருகிற சித்தவிர்த்திக்கு அசூயையென்று பெயர், இதற்குச்சாட்சி பவுண்டரிக வாசுதேவன்.

(௰௧) டம்பமாவது:—தான் செய்கின்ற புண்ணிய கருமங்களைப் பலரும் பார்த்துப் பளாவென்று மெச்சிக்கொள்ளவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு டம்பமென்று பெயர், இதற்குச் சாட்சி அம்பரீஷன்.

(௰௨) தர்ப்பமாவது:—நானே சுத்தவீரன் எனக்கு யாரொருவரும் நிகரில்லையென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு தர்ப்பமென்று பெயர், இதற்குச்சாட்சி சதகண்ட ராவணன்.



(௰௩) அகங்காரமாவது:—என்னுடைய வன்மை யறியாரோ? நானே என்னைச் சிருட்டிக்கிறவன்; நான்பிரமத்தைப் பிடிக்க வல்லவனென்று விகற்பித்துவருகிற சித்தவிர்த்திக்கு அகங்காரமென்று பெயர், இதற்குச் சாட்சி மதுகைடவன்.

இதனால் இவைகளெல்லாம் அற்பமென்றறிந்து சற்காரியத்தினாலே, சற்குருவால் கிருபைசெய்யப்பட்ட ஞானமாகிய விவேகமென்னும் வாளினாலே; இவைகளைச் சின்னாபின்னப்படுத்தி அழித்து நிவர்த்திக்கக் கடவதாக.

இச்சரீர மேப்பமை வருமென்றுஞ் அதிக சிரத்தாபத்தியுடனே சாதன சதுஷ்டய சம்பத்தியுண்டாகிச் சற்சங்க மூலமாய்ச் சற்குருவினிடத்தில் சதாகாலக்ஷேபமாய் சிரவண மனன நிதித்யாசனத்தினாலே ஆத்மா அனாத்மா விசாரஞ்செய்தால் ஆத்மஞானமுண்டாகும், மற்றப்படி எதனாலும் உண்டாகமாட்டாது. மெய்ஞ்ஞான அருளாகிய அருள்ஞானம் உதயமானால் அஞ்ஞானம் நிவேரூம்வண்ணம்; அடியோடே முழுவதும் அழிந்துபோம்.

அஞ்ஞானம் போனால், அவிவேகம்போம், அவிவேகம்போனால் அபிமானம்போம் அதுபோனால், ராகத்துவேஷாதிகள்போம், அதுபோனால் கன்மம்போம், அதுபோனால் ஜன்மம்போம். அதுபோனால் துக்கம்போம், அதுபோனால் சுயம்பிரகாசமான சொரூபசாட்சாத்காரமேயாவன்.

—(§)—

வள்ளலார் சாத்திரம்.

" சாறுதழு புலன்கள்போய்க் கரிசறு மனம்போய்ப் போதம் போகும் போனுயாருயிர்ப் போதம்போகும், சேறுபடு வெளிக்குமேலாஞ் சிவப்பிரகாசந் தோன்றும், மாணவே பிறவேழுத்தி நில்லென மதிநதிடாயே " எனவும்,

—(‡)—

உபநிடதம். (ஞானசாதனநிலை)

" பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் றூக்காம் புத்திவிசாரித்தறியும் பொலிவதனை யராக், தன்போல விலையெனவே வகையாரமர மாக் தவிகிசாஞ் சித்தமொரு தன்மையிலை ஞெயா, மின்மோதுஞ் சலனமன மசையாம னிறுத்தி விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து, வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால் வைத்தவிடத் திருக்குசித்த மகத்துவமுந் தருமே "

—)•(—

## சாதனை நான்கில் ஞானமொன்றே சிறந்ததெனல்.

—]§[—

பிரபுலிங்கலீலை.

" உரைசெயிற் பரமஞான மொன்றுமே முத்திக்கேது
சரியைநற் கிரியாயோகந் தாமொரு மூன்றஞ்ஞான
மருவுதற் கேதுவென்றே மறைபுகன் றுரைக்குமிந்தக்
கருவினைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவரன்றே"

திருமந்திரம் :—ஞானத்தின் மிக்க தவநெறி காட்டில்லை, ஞானத்தின்மிக்க சமயமு நன்றன்று, ஞானத்தின் மிக்கவை நன்முத்தியாதலால் ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே" எனவும்,

தாயுமான சுவாமிகள் :—பத்திநெறி நிலைநின்ற நவகண்ட பூமிப் பரப்பைவல மாகவந்தும், பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும் பசிதாக மின்றியெழுகா, மத்தியிடை நின்றமுதிர் சருகுபுனல் வாயுவினி வன்பசி தனைக்கடைத்து, மௌனத் திருந்துமுயர் மலைநுழைவு புக்கியு மண்ணுரச வாடிமுற்றுஞ், சுத்திசெய்துமூல பிராணனொ டக்கினைச் சோம வட்டத்தடைத்துஞ், சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பக டோறு நிலை நிற்கவீறு, சித்திசெய்துஞ் ஞான மலதுகதி கூடுமோ சித்தாந்த முத்திமுதலே சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயானந்த குருவே" என்றும் கூறியதே சான்றும்.

—•—

## ஞானாசாரியர் ஒருமொழியின்றி எத்தவமும் பயன்படாதெனல்.

—(•)—

நிஷ்டானுபூதி.

" சரியையின் நெறியி னானுஞ் சற்கிரி யையினும் யோகம்
புரிதரு முயற்சியானும் பொருட்டொணா தென்பர் மேலோர்
உரிய தேசிக னுரைத்த வொருமொழி யுண்மையாலே
அரியமெய்ஞ் ஞான வீடு மடைவது திண்ணமாமே" என்றும்

" வித்தக மாகப் பலகலை பயின்ற மேவுறும் பயன்களை யறிந்தும், தத்துவ முழுதுஞ் சட்ட முணர்ந்துந் தன்னிலையறிவதற் கரிதாம், சுத்த மெய்ஞ்ஞான தேசிகன் மகிழ்ந்து சொல்லாமற் சொல்லுமோர் மொழியாம் முத்திரையோன நிலையின்வன்றி முத்தியி னிலையடையாதே" எனவும்,



பட்டினத்தடிகள் :—வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க், கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடித்து, கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே, முட்டாதப் பூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே" என்றும், பிறவற்றாலு முணர்தல்வேண்டும்.

—(§)—

## ஞானமின்றிய மற்றைய மூன்றினுக்குள்ள பிறப்பு.

—)(—

வள்ளலார் சாத்திரம். ஞானவிளக்கம்.

" உற்ற சரியையனுக் கோராயிரம் பிறப்பு
மற்றையர்க்கு நூறாகும் வன்பிறப்பு—முற்றுகின்ற
யோகிக் கொருபிறப்பு வுண்மைச் சிவஞான
மோகிக்கு விப்பிறப்பின்—மூத்தி"

சோருபநிலை.

" காயுங் கிழங்குங் கனியருந்தி நோற்றாலு
மாயும் பிறப்பகல மாட்டுமோ—காயத்திற்
றங்குஞ் சதாசிவனைத் தானாகக் கண்டதனை
யெங்குமாய்க் கண்டார்—விறும்"

" காயந் துவளாமற் கரண மசையாமல்
வாயும் பதையாமல் மாற்றியே—நேயத்
தறிவானந்தத்தி லழுக்கண நின்றாலும்
பிறவார் சிவஞானி—பின்" இதை நோக்கியே;

" கருவிகரணங்களோய்ந்து கண்மூடி யொருகணமிருக்கவென்றாற் பாழ்த்த கன்மங்கள் போராடுதே" எனவும்,

" சிந்தையை யடக்கியே சும்மா யிருக்கின்ற திறமரிது" எனத் தாயுமான சுவாமிகள் திருவாக்கினாலுமுணர்க,

—0—

## பொருளிற் பயனும், பயனுமின்மையும்.

சிவாகமக் கச்சிமாலை.

" நல்லாரைப் போன்றிட் டிருப்பினும் வஞ்சகர் நல்லரல்லர்
பொல்லாரைப் போன்றிட் டிருப்பினு நல்லவர் புண்ணியரே
புல்லாச மாய்மலர் கொண்டெறிந் தானன் றருவழிந்தான்
கல்லா லெறிந்தவன் முத்திபெற்றான் கச்சி யேகம்பனே" என்ற

தற்கு, " கர்ப்பூரம்போலக் கடலுப்பிருந்தாலுங் கர்ப்பூரமாமோ கடலுப்பு என்பன பிறவற்ருல் முடிவறிக,

—)*(—

## மனவொடுக்கமில்லாது யாதும் பயன்படாது.

—(1)—

சிவஞானப்பிரகாச் வெண்பா.

" பாடப் படிக்க வெழுதப் பயன்சொல்லக்
கோடாமல வந்துங் குணமில்லை—சேடாகேள்
சித்திர தீபம்போலச் சிந்தை தனைநிறுத்திச்
செத்தாரைப் போலே—திரி " எனவும்,

பட்டினத்தடிகள்.

" ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்ற நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமும் டம்பமும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே—திரி " எனவும்,

" எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பெற்ருலு
முத்தர் மனமிருக்கு மோனத்தே " என்பதே சான்ரும்.

இச்சாதனையிற் றேர்ந்தார் " பழுத்தமனத் தடியவர் போகின்றர் யான் பாவியேன்" எனுந் திருவாக்கினைப்போந்த வுதாரணங்களுக் கருகராவர். இவர்களியாதொரு வேடங்களையும் பிறவுமாய கோரணிகளையுங் காட்டார். திருநீறே திருமேனியாகக்கொண்டு சிவமாகக் காண்பர்.

பொன் குடத்திற்கு பொட்டு வேண்டுவதின்றெனக் கடந்தநெறியார் முதுமொழியின் பயனுடைத்தாய் அனுபவிகளுண்மை யுரையின்படி அத்திருநீறு பஸ்பமெனப்படும் அவையே; சனன மரண வுபாதியை நீக்கும் ஔடதமாதலால், அவற்றை வேருகப் பிரித்து அதனடுவிலியாதுஞ் செய்யார். அதுவே; பூரணமதியாக நிறைந்திடுதலால் சர்வ பரத்துவ சோதி, பிறை, சுழுச்சியாகிய சுடர், வரிவட்டம், அக்கினியாகிய காந்தாரம், நடுவொளி, சொரூப விளிப்ப, வச்சிரகாந்தமலைமுடி, சதாசிவவொடுக்கம் பிறவுமாக நிற்றலே சான்ரும். அவைபோல்வனப் பிரிவினையைச் சிவயோகாந்தார்கள் அகத்துட்செய்து சுபிக்ஷ லட்சணத்தைக் கண்டு மகிழ்தானந்தித்து, மத்தர், பேயர், பாலர், என முக்குண வயத்தராய்த் தன்னை மறைத்துநிற்காது, வெளிப்படையாக அவற்றிலும், பலபலவர்ணங்களை, பேதங்களை மாத்திரைகளுக்கக்காட்டி மயங்கச்செய்வதும்; அம்மேறையாக அருகரல்லாதாரையுஞ் செய்விக்கச்செய்வதும் ஒருசமயமாகிய



மார்க்கத்திலேயே பலவேறப் பிரிவினைகளை யுண்டுபண்ணி அவ்வவ்வகைகளுக்குரியவைகளையே உயர்வு, தாழ்வு, என இல்லாதவற்றை யுருவகப்படுத்தி வேண்டுவோரைக் கூடுதலும் வேண்டாரை நீக்குதலுமாம்.

கபிலர் :—" ஆண்முதிதேக பெண்முதிதோ யன்றி யலிமுதிதோ " யெனவும், " மர்ரிதரின் சிலரை வறைந்துப் பெய்யுமோ, காற்றுசிலரை நீக்கி வீசுமோ, மாநிலஞ்சுமக்க மாட்டேனென்னுமோ " எனவும்,

" சிறப்புஞ் சீலமுமில்லாது பிறப்பு நலந்தருமோ பேதையீரே " எனப் பறையறைந்திருப்பதைத் தெரிந்துந் தெரியார்போலறியாமைக்கு ஆட்படுதலும்,

ஞானமதியுள்ளான் :—" பெண்ணுக்கு வாணும் பிறந்ததறியாமற் பித்தனவனொரு சித்தனென்று " எனக்கூறியதைத் தானிருக்கு நிலைமையினுற் சிஞ்சித்துங் கவனியா துலகை மயக்கலும், மண்முதலாகாயம் வரையினுமுள்ள பகக்களாகிய ஆன்மாவையுடைய சீவர்களனைத்தும், ஒன்றையொன்று கலத்தலும், கூடுதலும், பார்த்தலும், பேசலும், சுகித்தலும், மற்றும் பலவாருன அகப்பற்று, புறப்பற்று; உயிர்சார்பு, பொருட்சார்புகளிடத்தே சங்கித்தலும், சங்கோஷித்தலும், எல்லாம் அன்னமயம் பிராணமயம், என்பது காட்சியாக அனுபவத்தழுந்திக் கிடந்தும் அன்ன விசாரம், சொன்ன விசாரம் அதாவது பொன்னுகிய விசாரம்; தோகையரை பன்னவிசாரம், பலகால் விசாரம் எனும் பட்டினத்தடிகளருந்திருமொழிப் பொய்யாகாது அலைக்கேயுழைத்தலும், " இட்டார் பெரியோரிடாதா ரிழிகுலத்தோரெனும் ஔவை மொழியும், " இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை யெல்லாருஞ் செய்வர் சிறப்பு " எனுந் திருவள்ளுவ நாயனுர் திருக்குறளும், இன்னும் படித்துங் கேட்டுந் தெரிந்துமில்லாத அநேககோடி சாத்திரங்களால் "சர்வம் சிவமயம் சர்வம்விஷ்ணுமயம், சர்வம் பிரமமயம் ஜகத் என உலகத்தோர் நற்சார்பிலுய்ய முன்னோர்களாகிய நம்பெரியோர்கள் அன்பே சிவம் என்பதை எங்கணும் வலியுறுத்தி ஸ்தாபித்திருக்க அவ்வரும்பெருஞ் செல்வமாகிய காருண்யவார்த்தையை (முழுப்பூசணியை ஒருசோற்றில் மறைத்தால்) மறைந்துபோய் விடுமென்றும், கையிற் குடைப்பிடித்தவுடனே சூரியன்ஸ்தமித்துவிட்டானென்றும், ஒருவேளைத் தனக்குவேண்டியபடி சாப்பிட்டால் அப்பசியொழிந்துவிட்டதென்றும், மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங் கறைகாண்பான் என்ற பாட்டைப் பாடியவுடனே, அவை யவனைவிட்டொழிந்துவிட்டதென்றும், அவரவர்கள் தானம், தவம், கன்மம் இவைகளுக்கீடாகவும், முன்சனனத்திலே ஆண்டவன்; அதின் முற்றுப்பெறுத சுகாசுகத்தை யனுபவிக்கும்படி சிவனருளுவன் என்ற பூரண நம்பிக்கைச்

சிறிதேனுமில்லாது, (அஷ்டசித்தி, இஷ்டகாமியஞ்) செய்வதாக படாடோபங்காட்டி வுலகைமயக்கி; கடவுளின்றித் தானே ஆதியந்த மத்யம், இம்மூன்றினுக்கு முடைத்தானவனாக வெளிப்போந்தவனைப் பின்பற்றி ஈசுரபக்தித்தும் தானனுபவிப்பதாகக் காட்டிக்கொள்ளுஞ் சமயாசாரம், வேதம் மற்றவைக்கும் தாழ்வையும் நிந்தையையு முண்டுபண்ணுவான் கள்ளச்சிந்தையும், கடத்தையும்போன்றும் (உண்ணல், உடுத்தல், அணிதல், சுகித்தல், படுத்தல்) அதாவது; போசிப்பு, வஸ்திரம், ஆபரணம், போகம் இறப்பு என்ற யாவும் பிருதிவியாகிய மண்ணிடத்தே ஆரம்பமும். முடிவாகிய கடைசிகதியுமேற்படுதலாலும், அவைகள் ஒருசிவரையும் விட்டுவிடாது, கடவுள் மகிமையாகச் சுட்டுப்பொருளெனப் பிடித்து பீடித்து; அதன்மயமாகவே தாய்க்கருக்குழியில் ஆரம்பமாகப் பிறந்திட்டபின் சுட்டெரித்தும், மண்ணுக்குட் புதைத்தும், அவாந்தரமாகக் கொல்லப்பட்டும் பலசீவர்களாலுண்ணப்பட்டும், இடம், பெயர், காலவரையறுக்கமுடியாது மறைந்தவையும், மறைவனவும், மறையப்போகின்றவையும் எண்ணுங்கால் தேவர்முதல் மக்கள் வரையினுமுள்ள வொருவராலும் முடியாதென்பது வெளிச்சமாகியும், அதை விருளாக்கியும் ஏகயோனி பிரதுத்வா ஏக சகோதரா: என்ற வேதவாக்கியத்தின்படி எல்லாரும் ஒரேவழியில் வந்தவர்களானபடியினால்; யாவரும் ஒருதாய்ப் பிள்ளைகளும் சகோதரர்களுமாவார்கள். இது எக்காலத்தும் பொய்யல்லவென்ற பொன்னான மெய்யைப் பள்ளத்தில் மறைத்தலும், இவைமுதலான பல ஆபாசங்களிற் புத்தியைச் செலுத்தலுமாகிய பாதகச் செயலானதைப் பெரியோர்களாகிய கற்றவர்களே ஒப்புவதில்லையென்றும், அவைகளாற் பழி, பாவம், சன்மமுண்டாகுமென அன்னவர்களா லெழுதியுள்ள சாத்திரங்கள் வெளிப்படுத்துவதென்றால் "ஏகமானவுரு வான நீயருனிறு லநேகவுரு வாகியே" என்ற தாயுமான சுவாமிகள் சுக உதயத்தை யுண்டுசெய்த செகவிலாசத்தினும் சகம், சீவம், பரமென்ற மூன்றாய்தாகி, சகலகேவலங்கடந்து, அநாதி முத்த சித்துருவாக, பலகோடி நாமரூப விலக்கணத்தையே இலட்சணமாகக்கொண்டு சர்வமாக விளங்குஞ் சீவம் என்னும் பரமானந்தக்கடவுள் சகித்து ஒப்புவரோ ஒப்புவதின்றும், அங்ஙனமுறைப்போன் ஆற்றொணாக் கொடுநோயனுசப் பிறந்து நிரந்தத்துன்பமாகிய நரகவாதனை அதாவது; நாசூக, நாம்புடையோனுக, நரகலையுடையோனுக, அவைகளையுண்போனுக, உழன்று மரிப்பானென்பது வேதத்தின் முடிவுரை.

இதைப்போல்வன அநேகக்கோடி பாபநிருத்தியமான பொய்களை ஞானியொருவனே, களைந்துசொல்ல வல்லவனென்பதைப்பற்றி,



வள்ளலார் சாத்திரம். ஞானவிளக்கம் (எ௩) வது வெண்பாவில்

" அடிக்கரும்பு காட்டுகின்ற வாராத வின்பை
முடிக்கரும்பு காட்டுமோ மூட—மிடிக்கின்ற
மெய்ஞ்ஞானி காட்டுகின்ற மெய்ஞ்ஞானந் தன்னையொரு
பொய்ஞ்ஞானி காட்டுவித்தல் பொய்" எனச் சொல்லியதே

சருவாதிகார மெய்யுடைத்தெனப் பெறப்பட்டது.

அவையொதரித்தலும் தன்னைத் தெளிவித்தலுமாகிய மனோலயப்பட:—

" எல்லா வுயிர்கட்கு மின்பங் கொடுத்தலினால்
எல்லாஞ் சிவனையே யெண்ணலால்—எல்லாஞ்
சிவனுருவே யாமாற் றெவிட்டாத வின்பஞ்
சிவன்பா லிருக்குமெனத்—தேர்" எனவும் போதித்தது,

தசவழக்குச் சிந்தனையில்,

" மையாடு கண்ணியு மைந்தருஞ் சுற்றமும் வாழ்வுஞ் செந்தி
லையாநின் மாயை யுருவெளித் தோற்றம்போ லானதெல்லா
மெய்யா யிருந்தது நாட்செல்ல நாட்செல்ல வெற்றவெறும்
பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்மெல்லப் போய்விட்டதே"

எனவுந் திடப்பட வெடுத்துரைக்கப்பட்டதை கவனித்தலே மக்கட் பிறவிக்கு மருந்தாயிருந்து நன்மைத் தருமென்பது முற்றுரை.

மற்றவை அறிவிய பயபக்தியோடு சத்தியசித்தனை வழிபாடுடன் துதிவையன்றி அவரது பூரண கடாட்சத்தி னனுக்ரஹத்தினால் உள்ள நிலையைக்கேட்டுத்தெளிந்து அவ்வுண்மைக் கைக்கூடும்வரையில் யதார்த்த ஆசாரவொழுக்கத்தைப் பின்பற்றிநின்று; தானஞ்செய்வதில் தாதா ஒருவனென்றும், சகலசாத்திரப் பண்டிதத் திறமையுடன் பாடிப் பிரசங்கிப்போன் பதினாயிரத்திலொருவனென்றும், நன்மையிற் சிறந்த காரியாதிகளிற்றலைமை யொருவன்றூறுளனெனப் பெரியோரெடுத்தோதியவதைப் போல; திரிவித வுலகத்தினு ஞானியொருவனே அரிதானதாய் விளங்குவனெனச் சொல்லப்படும் இத்தகையானச் சிறந்த தேகத்தையெடுப்பது பிறவிகளிற் றலைமையுடையதெனவும், அங்ஙனமெடுத்தப்பிறவி யாதாமொரு நன்மையினுமாட்படாது,

உத்தமவாதநூல் வெண்பா.

" கண்டதே காட்சியென்றிக் கண்டவர்போற் பேசுவதென்
கொண்டதே கோலமின்றிக் கோலமில்லை—உண்டோ
பிறந்தார்கண் டிங்கே யெவர்வந்துச் சொன்னார்
பிறந்தும் பயனுடையாப்—பேர்" எனும் வாக்கினுக் கிணங்க

வாளாய் சனித்து மரணக்காட்டிலே தீப்பற்றி சாம்பராய்ப் போனதின் பின் யாதுசெய்யமுடியும், தான் முற்றும்பியிருந்த யேனையப் பிறவிகள் தானென்ன செய்வர். "கொட்டி முழக்கியழுவர் மயானங் குறுகியப்பா லெட்டி யடிவைப்பரோ விறைவா கச்சியேகம்பனே" எனவும் "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே" எனவும் பட்டினத்தடிகள் வரையறுத்துரைத்த திருமொழியை; அவசரப்படாது சற்று நிதானமாய் கவனிக்கில் சிவபக்தி, சிவாசாரம், சிவநிலை, குருபக்தி, குரு விஸ்வாசம், குருநிலை யில்லாதா ரெத்தகையோரென்கினும் நன்மையடையமாட்டாரென்பது பெறப்பட்டது. இதைநோக்கியே;

பட்டினத்தடிகள்.

" தவியாதிரு நெஞ்சமே தில்லை மேவிய சங்கரனைப்
புவியார்க் கிருக்கின்ற ஞானநாதனைப் புராந்தகனை
அவியா விளக்கையென் னம்பலத்தாடியை யைந்தெழுத்தாற்
செவியாம லீசெவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே" என்றும்

" ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி யறிவழிந்து
மெய்யும்,பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவனியான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர் திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே" என

வருந்தினு லஃதிறுதியி லெமனெனும் கூற்றனுகிய மரணத்தை செயித்து சாட்சாத்காரமாக அரும்பெரும்பயனுடைத்தாகுமாதலான் பெரியோருறுதி மொழிகளை சிவபோத குருவரப்பிரசாதமாகவெண்ணி சதா அனுஷ்டித்து தம்தம் புண்ணியவசப்படி; கன்மத்தையகன்று நன்முத்தி சாதனையாகிய இரண்டற்ற சுகபோகத்திலே மூழ்கி ஆனந்த சொரூபியா யென்றும் வாழ்கக்கடவர்.

இத்தகைய பரமானந்தப் பேறிவை விளக்கி சர்வம் சிவமயமே யென சைவாகம சுருதி ஸ்மிருதி முதலான சாத்திராதாரவோடு நிலைப் படுத்தி நிற்றலால் சிவபராதீன நிஜதத்வ நிரூபணம் எனத்தெளிந்த கருத்துரையெனப் பூரணப்படுகிறது. கோழி கல்லைநீக்கி அரிசியையும்; அம் சப்பட்சி நீரைப்பிரித்து பாலையுட்கொள்ளுவதைப்போல பெரியோர்கள் இதை அனுசரித்ததன் பயனை யனுபவிப்பர்களென்த திருவருளைச் சிந்திக்கப்படுகிறது.

—(I)—

ஓம் நமப்பார்வதி பதயேநம: அரஹரமஹாதேவா

திருச்சிற்றம்பலம்.

—)*(—



உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானசுபிஷெளமியம்

## விநாயகர் வணக்கம்.

—]§[—

ஸ்லோகம்.

" சுக்கிலாம் பாதரம் விஷ்ணும்
சசி வர்ணஞ் சதுர் புஜம்
பிரசன்ன வதனந் தியாயே
ஸர்வம் விக்கினோப சாந்தயே "

" இஷ்ட காம்யார்த்த சித்தி யர்த்தம்
ஸமஸ்த மங்களா வாப்தியர்த்தம்
ஆதவ் விநாயக பூஜாஞ் சகரிஷ்யே நம: "

" ஏகதந்தம் சதுர் அஸ்தம் பாசம் அங்குச தாரிணம்
இறுதஞ்ச வாதம் அஸ்தம் விப்பிராணம் மூஷிகத்துவஜம்
ரத்த லம்போதரஞ் சூர்ப்ப கர்ணகம் ரத்தவாசகம்
ரத்தகந் தானுவிப் தாங்கம் ரத்தபூஷ்மை சுபூஜிதம்"

" பக்தாநுகம் பினந்தேவம், ஜெகத்காரண மச்சுதம்
ஆவிற்பூதஞ் சசிருஷ்டி யாதவ், பிரகிருதே புருஷாத்பரம்
யேவந்தியா யேதுயோநித்யம், ஸ்யோகியோகிநம் வாகா" ஓம்!
மூஷிக வாஹன மோதகஹஸ்த, சாமரகர்ந விளம்பித சூத்திர
வாமணரூப மஹேஸ்வர,புத்ர, விக்னவிநாயக பாதநமஸ்தே நமஸ்து

# அருள் வேண்டல்

## பணிசத்தப்பாமணி.

—(§)—

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—()—

அருளே பழுத்த மெய்யடியா ரகம்விட் டகலா வரும்பொன்னே
மருளே பழுத்த மனத்துடையேன் வணங்கத் திரமோ சிறிதுமிலேன்
தெருளே பழுத்த மயிலை யண்ணல் ஸ்ரீகபா லீசன் றுதிப்புகலப்
பொருளே பழுத்த வரமருட்செய் புதிதநிறை விநாயக மணியே. (௧)

ஐயா! அப்பா! அன்னை குரு பரதே வரா யனைத்தினுரு
மெய்யா யிலகும் பரத்துவனே விண்ணோர் மண்ணோர் வேண்டிதொழுந்
தெய்வ நிலைகொள் மயிலை யண்ணல் ஸ்ரீகபாலீசன் றுதிப்புகலப்
பொய்மையுடையேன் றனக்கருட்செய் புதிதநிறை விநாயகமணியே

இகத்தும் பரத்து மன்னுகின்ற பிறையே! மறைநான் கலையறிந்துப்
புலவர்க்கரியோய் பூத்தொளிரும் பூவே காவே புங்கவருட்
டிகழுந் தேவே மயிலை யண்ணல் ஸ்ரீகபா லீசன் றுதிப்புகலப்
புகழே நிலவும் வரமருட்செய் புதிதநிறை விநாயக மணியே. (௩)

எங்குந் தங்கும் பரத்துவனே வினையொன் றில்லா வெழின்முடிவே
மங்கா வொளியே மாசில்லா வள்ளலே ஞான வாழ்வளிப்போய்
திங்கட் சடையன் மயிலை யண்ணல் ஸ்ரீகபா லீசன் றுதிப்புகலப்
பொங்கு நினைத் திருவருட்செய் புதிதநிறை விநாயக மணியே. (௪)

எண்ணு வுருவம் படைத்தோனே யெவருங் காண வேத்துகின்ற
அண்ணு ஞான வரப்தருள மகலா நடம் புரிபவனே
திண்ணார் புயனு மயிலை யண்ணல் ஸ்ரீகபாலீசன் றுதிப்புகலப்
புண்ணியா நினது வரமருட்செய் புதிதநிறை விநாயக மணியே. (௫)

காக வடிவாய்க் கும்பமுனிக் கலங்கக் காட்சித் தந்தவனே
சோமசுந்தர கந்தனைத் துவளாப்படி காத்தவா! சந்திர
சேகர னுத்திரு மயிலை யண்ணல் ஸ்ரீகபா லீசன் றுதிப்புகலப்
போகந் தழுவும் வரமருட்செய் புதிதநிறை விநாயகமணியே. (௬)

நகைற் றவர்முன் பலவடிவாய்த் தோன்றி மறைந்த தம்பிமுகா!
அகத்துன் மறைந்த வினையாவு மாட்டவெவரோ வறிவார்கள்
செகமே பணிசெய் மயிலை யண்ணல் ஸ்ரீகபா லீசன் றுதிப்புகலப்
புகலே யடைந்தேன் வரமருட்செய் புதிதநிறை விநாயக மணியே. (௭)

—•—



41

# நூல்.

## கருணாகரமாலை.

ஒருவிகற்ப சந்தக் கலிவிருத்தம்.

—()—

மூலமும் - வியாத்தியுரையும்.

—)(—

பெருமா னெனவே பேசும் பெரியோ
ரொரு வாதனையு முணரார் சிவமே
எரு தேறிவரு மிறையே * மயிலைக்
கருணாகரனே ‡ கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) உலகினிடமாகக் காணப்படுகின்ற எண்பத்துநான்கு நூறாயிர சீவபேதங்களில் விருப்புற்று அவ்வவ் வுயிருடன் றுத் தக்கவிதமான ஆத்மசொரூபியாய்ச் சஞ்சரித்துவருகின்ற பேரன்புடையக் கடவுளாக விளங்குகின்றப் பரசிவமே! தின்னை நிகரான வஸ்துக்கள் இகத்தும், பரத்தும், தேவர்முதல் மனிதாதிவரையினுங் காணப்பெறாத சர்வாடம்பர மங்களாகார சொரூபனாக அவ்வவ்வசரத்து நிறைந்துள்ளவன் நீயே என்று ஒரு நிமைநேரமும் மறவாது சதாவழிபாடுடன் வந்தனைச் செய்து சகலத்தும் பெருந்தகையுடையவனென நின்புகழை அளவளாவிய அபிலாசையோடு சொல்லும் மூதுணர்ந்தவர்க ளென்னும் மேதாவியர் கன்மவசத்திற்கட்டுப்பட் டதன்வழிக்கே இரவுபக லொழியாதுழைத்து களியாகின்ற பாமரர்களனுபவிக்கின்ற தீய மாயரோயில் ஒனறேனுந் தெரியாரென்பது உண்மையே.

சத்தியசாந்த சதோதய சர்வஞானப் பிரியருடன், யாதொருபற்று முன்மீதில்லார்களின் பிறவித் துன்பத்தை யகற்றி யநுக்ரஹஞ்செய்யாதிருக்க, திருமாலெனும் விஷ்ணுவே நந்தியாயுருகொண்டு வர்ச்சிக்க வதன் மேலாரோகணித்து காட்சிகொடுக்கவரும பரமே! அம்மைப் பார்வதியானவள் மயிலாகயெழுந்தருளி வணங்கி பூசித்ததனால், மயிலையெனும் பெயருடைய திருப்பதியில், பிரமாவென்னும் ஆயனுடைய கபாலமாகிய தலையோட்டைக் கையிலேந்தியுள்ள யீசுரனே! நீ காருண்யமுள்ளக் கருணையை வேண்டுவோர்க்கு அளிக்குங் கையையுடையவனே! அதற்கு அபிப்பாயக என்பதாம்.

* மயிலையுற்பவம்:—எல்லா வுயிரிடத்தும் பிரியா ஆற்றலுடையவனாகிய சிவபெருமானை நோக்கி பிறவாமுத்தியாகிய சாதனைகளைக் கொடுக்கவல்லது யாதென்பதாக அம்மையார் விசாரித்ததும், அவற்றில் பஞ்சாக்கரம், திருநீறு முதலியவைகளே சிறந்ததென்று சுவாமி உபதேசித்ததும் அத்தருணம், அழகிய கேதாரமாகிய மயிலொன்று நடித்தன்னதை அம்மையார்க்கண்டு அதனிடமே தன்புத்தியைச் செலுத்தியுள்ளதைத் தெரிந்த பரமசிவம்; மயிலைப்பார்த்து சந்தோஷிப்பதனாலென்னபயனுண்டாகும் நீயே அவ்வுருவத்தைப் பெற்றாலன்றோ? அதனது மகிமைகளை நீயடைந்தனுபவிக்க முடியும், வெறுமனே பார்த்தசஞ்சலதன்மீதேற்பட்ட ஆசையொருசிறிது நீங்காதெனச் சொல்லிய வார்த்தையின்படி கைலையைவிட்டு தொண்டைநாடென்று வழங்குந் திருக்ஷேத்திரத்தில், அம்மையாராகிய கற்பகாம்பாள் அம்மயில் வடிவாகி புன்னை மரத்தின்கீழ் சிவலிங்கமமைத்து பூசித்ததனாலதன்காரணமாக மயிலையென்ற பேர்பெற்றது.

‡ பிர்ம கபாலத்தையேந்திய காரணம்:— பஞ்சமூர்த்த லட்சணமில சொரூபமே கடவுட்குரியவையென்பதை பிரஸ்தாபிப்பான்வேண்டியபடி பரமசிவம் பஞ்சகிருத்திய வயத்தரா யிருக்கின்றன ரென்பதையுணர்த்த ஐந்தலை யுடையவராயிருந்தார். அம்முறையாகவே; பிர்மாவாகிய வேதனுக்கும் ஐந்துதலையிருந்தமையினால், பரமசிவம் தனக்குமேற்பட்டவரல்லவென்றுக் கருதினவனாகிய அன்னவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லையென கர்வித்து வணங்காதிருந்ததை நோக்கிய பரமசிவம் பிர்மாவின் ஐந்துதலையிலொன்றைக்கிள்ளி அம்மண்டையோட்டைக் கையிலேந்தினபடியினால் கபாலீச்சுரனென வழங்கலாயிற்று.

மற்றிதனது அந்தரார்த்தத்தை மயிலைபுராணத்தை வாசித்துணர்க.

—(1)—

திருவா மனன்முன் செறிக்க சுக்கிரன்
பொறிவிழிப் போக்கிப் புகழ்கொண் டவனே
பருணிதர்ப் பணியும் பரமனே மயிலைக்
கருணை கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாக்கியுரை) மாபலி சக்கரவர்த்தியென்னும் அரசனிடமாக மூன்றடிமண் தானங்கேட்கும்படியாக தனைப்பற்றி வந்தவராகிய வாமனாவதாரமான ஸ்ரீமந்நாராயணன் விருப்பத்திற்கவ்வரசனிணங்கி அத்தானத்தைக் கொடுக்கும்படி என்னை வாமனன் கையில்வைத்து சலம்விடும்படி கரகமாகிய செம்பை யெடுத்தவேளையில், அருகேயிருந்தவனாகிய சுக்கிரபகவான் என்னுங் குருவானவனுக்கு மனம்பொறாது அத்தானத்





தைத் தடுப்பான்வேண்டிய நோக்கத்தோடு கருவண்டாக வடிவமெடுத்து சலம்வரும் வழியை அடைத்துக்கொண்டதனால் சலம்வராது நிற்றலின் காரணத்தைத் தெரிந்துகொண்டவராகிய ஸ்ரீமந் - நாராயணன் அங்குள்ளவோர் தர்ப்பையை யெடுத்து அதனாலவ்வண்டின் கண்ணைக் குத்தினதினால் கண்குருடாயின; அக்கண்ணை யடையும்படியான மார்க்கமும் சாபநிவர்த்தியுமெவ்வாறெனவினவ, அதற்கு வாமனனும் கண்ணைக் குத்திய தர்ப்பையை; ஆகாயமார்க்கமாகவிட்டெறிந்து இந்த தர்ப்பை, எங்கே விழுகின்றதோ அவ்விடத்தில் திருக்குளமெடுத்து சிவலிங்கமமைத்து, வணங்கினாலத்தோஷம் நிவர்த்தியாகி கண்பார்வையை யடைவாயெனத் திருவளம்பற்றியவிதமே, அத்தர்ப்பை விழுந்தவிடத்திற் றன்பேரால் திருக்குளமொன்றெடுத்து அதனருகில் சிவலிங்கமொன் றமைத்து பூசித்ததனால் அச்சாப நிவர்த்தியாகி பழையபடி சுக்கிரன் பார்வையடைந்தான்.

அதிவிஷயமாய் (மூர்த்தம், தீர்த்தம், க்ஷேத்திரம்) என்பது மூப்பொருளாய், முதுமொழியாய், முச்சகமாய், மும்மூர்த்தியாயுள்ளதென விளக்கலாம்; சுக்கிரலிங்கம், சுக்கிரபுரி, சுக்கிரதீர்த்தம் எனும் பெருமைதங்கிய நாமங்கொண்டவனே! வேதாகம சாத்திரங்களைக் கற்றுத்தெளிந்து சமயதீட்சை ஆசாரியபிஷேக முதலியவைகளிற் சிறந்துவிளங்கிய பெருந்தகையவராகிய மஹான்களால் வணங்கும்படியான பரசிவமே! திருமயிலை யென்னுந் திருப்பதியே யிடமாகவுடையவனே! பிர்மக் கபாலமாகிய மண்டையோட்டைக் கையிலேந்தியுள்ள யீச்சரனே! நீ காருண்யமுள்ளக் கருணையை வேண்டுவோர்க்குக் கொடுக்குங் கையையுடையானே அநுக்ரஹிப்பாயாக என்பதாம். (௨)

உருகு மடியா ருளம்விட் டகலாப்
பொருளாய் நிலவிப் புரமுன் றெரித்தோய்
வெருளா தருளும் விமலா மயிலைக்
கருணா கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாக்கியுரை) எடுத்துள்ளப் பிறவியின் கன்மமாகிய ஆசாபாசமென்னும் பந்தத்தை சகடைகளினுந் துன்பமும், காதையுஞ், ஜென்மமும் சமுத்திரத்திற்கு அலையொழியா திருத்தலைப்போல, வந்து வந்து அலக்கழித்துக் கொண்டுவிடுதே அக்கன்மத்திற்குரிய வல்லமையென்பதை நன்குதெரிந்த அன்பர்கள்; இச்சனனக் கடலாகிய வுததியை எத்தவகையி னிவர்த்திச் செய்வதெனவெண்ணின்: வேதாகமங்கள் விச்சித்தபடி பரமசிவமாகிய தேவரீரையன்றி, அப்பிறவி சமுத்திரத்தைத் தாண்டி நன்மையடைய கிருபை பாலிப்பவர் வேறொருவருமில்லையென

குருமுகத்தாலும், சற்சனர்களின் கூட்டுறவினு லறிந்துத் தெரிந்துக்கொண்டபடி உள்ளங்கசிந்துவாடி கண்ணீருதிர்த்து நினைக்கின்று மெய்யன்பர்களாயுள்ள சிவாநுபூதியரின் இருதயத்திலிருந்து நீங்காதவனுகி அவ்வன்பர்களெவ்வண்ணமாய்க் கருதுகின்றார்களோ அவ்விடத்தெல்லாம் அவ்வவ்வுருவுடையக் கோலங்கொண்டு காட்சிதந்து பிரகாசித்து, அவ்வடியார்க்கு யிடுக்கணுகைவேற்பட்ட வரக்கர்கள் வசித்துள்ள § முப்புரங்களையுமழித்தசங்காரமூர்த்தியே! உலகப்படாடோப வெளிடம்பமாய் மேனியைப் பலவித ஆடையாபரணங்களா லழகுப்படுத்திக் காட்டுவதினாலும், பார்வையைக் கெடுத்துத் தங்களது வழிக்கே சகாயிப்படுத்தி வினைதரு பையை யடைவதற்கான பக்திமார்க்கத்திற் செல்லவிடாது (ஆலைவாய்க் கரும்பு, பாம்பின்வாய்த் தேரை, புலியின்வாய் மறி.) இவைப்போன்றுள்ள பல ஆன்மாக்கட்படுந் துன்பத்தைப்போன்ற மாய்கையின் வயப்பட்டு கெட்டழியாது உனதடியாருறவும், தேவரீருக்காளாகு நற்குணத்தையும் பிரசாதிக்கவேண்டும். குற்றமறப் பரமசிவமே! திருமயிலை யென்னுந் திருப்பதியே இடமாகவுடையவனே! பிரமக் கபாலமாகிய தலையோட்டைக் கரத்திற்கொண்ட யீச்சுரனே! நீ காருண்யமுள்ளக் கருணையை வேண்டிவார்க்கு அநுக்ரஹிக்குங் கையையுடையவனே நமை பாலிப்பாயாக என்பதாம். (௯)

§ முப்புரம் – மூவாசையென்பது சிவாகம ஞானியர் கருத்து.

ஒருபற்று மிலா துணர்வா லறிவார்த்
துரும்பா யலையிற் றுவள்வேன் கதியென் ?
கருகா யினுந் தேடுவார்காண மயிலை
கருணு கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) உலகினிடமாகப் பிறந்துள்ள ஆன்மாக்களாகிய சீவர்களடைந்துள்ளதும், அடையவேண்டியதுமான, புறப்பற்று அகப்பற்றுகளெனும் பாசபந்தத்தின் காரியங்களாகிய விஷயங்களில் ஒருசிறிதும் விரும்பாது உடல், பொருள், ஆவி மூன்றும், மண், பெண் பொன் மூன்றும், ஆகாரம், அறிவு, இச்சை மூன்றும் நினக்கே யுரியதென வெறும் வாய்ச்சொலின்றி உண்மையாகவே தத்தஞ்செய்துள்ள பேரன்புடைய மஹாத்துமாக்கள் அவர்களது அன்பின் முதிர்ச்சியின்படி தெளியும்வண்ணம் நினது ப்ரக்ஞான சொருபத்தை உள்ளவிதந் தெரிகுநர்கள். அம்மஹாத்மாக்களின் வழியிற்சேராது, மாய்கைக்கே இரவுபகலாக வுழைத்து சமுத்திரத்திலோ ரணுமாத்திரையானவந்து அலையிற் படுகின்ற கஷ்டத்தைப்போல வதைப்படுகின்ற வுன்மத்தனுகிய அறிவிலியேன் முடிவயாதோ? பெருந்தக்கமே, மரங்களிலிருந்துத் தரையிலுதிர்





ந்துள்ள காய்ந்த இலைகளையாவது பயனுளதென்று வேண்டித்தேடி அதை வாரிக்கொண்டுபோ யெரித்து லாபத்தையடைவர். அந்தயிலைக்குவுரிய பிரயோசனமுமில்லாது, மண்ணுக்கு மண்ணாய், புழுதிக்குப்புழுதியாய், சாம்பருக்குச்சாம்பராவதன்றி, வேறயாதுக்காளாய் நின்றேன் அப்பனே! திருமயிலையென்னுந் திருப்பதியே யிடமாகவுடையவனே! பிரமக் கபாலத்தைக் கையிற்கொண்டவனே!! அடியார்கள் வேண்டுவதை நமை பாலிக்குங்காருண்யமுடையவனே அநுக்ரஹஞ்செய்வாயாக என்பதாம். (௰)

திருநீ றுடையார் சிவமாவ ரெனப்
பெருநாற் படித்தார்ப் பிறப்பித் தனரே
குருவா லறியேன் குணமே மயிலை
கருணா கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சாட்சாத்காரமாகிய பரமசிவமே! நினது தேகமே வெண்ணீறுதலால் அதைக் கால்க்ரம ஆசாரமுறைமைப் பிரகாரம், அணிந்துள்ளவர்க ளெவர்களாலும், அவர்கள் சிவபெருமானேயாகுவரன்றி; வேற்றுருவமாக வெண்ணப்படமாட்டார்கள். அப்படி, (மனிதரிற்பேதம் வடிவேவரக் கண்டுளார்) என்னுங் கபிலர் திருவாக்கின்படி (பேதமற்றவருட் பெரியோன் சிவனே) என சத்தியபாஷியத்தினை வேறாக எவ்விடத்தும், எக்காலத்தும், எந்நிலைமையிலேயும் கருதாரென்று வுண்மையைப்போதிக்கும் பேரின்பசாதன பிரபல சுருதிகளைக் கற்றுத் தேர்ச்சியடைந்து; கற்றகல்விக்குப் பழியையும், பாபத்தையும், அறிவின்மையையுஞ் சம்பாதித்துத் தன்னையாளாய் கெடுமதிக்காளாகிக் கொள்ளாது, சரிதை. கிரியை, யோகம், ஞானமென்ற நான்கை யுண்டு பண்ணுங் காருண்யத்தினுவ் அக்நான்கே (மாதா, பிதா, குரு, தெய்வம்) முதற்படி தாய் – மண், இரண்டாவதுபடி தகப்பன் – உயிர்த் தாரகையூதியவன், மூன்றாவதுபடி ஆத்மா – அருந்தன் வழிநிலைக்காட்டி சிறந்தல் குருபோதனை இம்மூன்றும் பயனடைய தன்னுடன் மற்றவைகளையுங்கண்டு; நான்காவதுபடி – தெய்வத்துட் கலந்து சிவமுத்தனுயொருபடித்தா யென்றுமழியாது (சமாதி) ஆகியான மூலப்பழம் விநாயகர்பெற்ற மாங்கனி) பிராணவொடுக்கம் அசைவின்றியது (கரிசலாங்கனி) கரி – யானைமுக விநாயகன், ச – சலாதார வக்கி சிறையவன் – ஆறுமுகன். அக் – நெருப்புடைய நீ, சூரியன், சந்திரன், அக்நி, மூன்றம் கண்ணுயுடைய சிவபெருமான், அக சித்தட் கலந்துள்ள சத்தியாகிய விஷ்ணு ஆக இந்நான்கும் அதனது சத்தியோடுத்பவமாகி என்னுனம், அட்டமூர்த்தி, இவைகளை ஒன்றிலொன்று சிவனுருத் தோன்றுற்று நந்துவங்கவிலடக்கிக்கொண்டு மரவ அவை ஒடுக்கமாகி (யோகம் எட்டு

வகையாக) வரையறுத்து; அப்பரங்களாகிய தெய்வங்களியாவுக்கும் (ஆதி முதல்) என நிற்றலால் அதனுடன், சமமாக ஒன்றிக்கூடி (பஞ்சபூதம் வசப்பட்டு சாட்சியாக; பஞ்ச கௌவியத்தால், சுண்மலராலுட்களனும் வரையில் புட்பங்களால் அசையாதுநிலையிடம் சொரூபவசம் அகப்படாத வரையில் திரிகரண சுத்தியாக சுத்தாத்மனுரூபக்குவங் கைக்கூடும்படி சவுகரியம்போல், காலவரையறுத்து, அக்கோங்கட்கு பழுதுவாராதபடி தத்துவமானசாதி பூமியிற்பொருந்தி அசையாவண்ணம் ஆசனங்களில்; மான்றோல், புலித்தோல், குக்கிடம், தர்ப்பை, கம்பளம் இவைமுதலானவைகளிலேதேனுமொன்றின்மேலிருந்து நிட்டையால் அட்டயோகம், இராஜயோகம் இன்னுஞ் சிலவற்றுஞ் செய்து வருவர்.

இவ்வநிலைப்பட்டு வஸ்து பரிசோதனை விளக்கத்தின் லட்சணும்ஸ வருவபேதங்கெட்டு ஒருபிரிவினையும் நிட்டையிற்றோன்றாது தான் முன்னரே (முன் தனனமென்றாலும் பொருந்தும்) செய்து, பார்த்து, கேட்டுத்தெளிந்து எக்காலமும், எக்காலமோவென சமயந்தெரியாது, ஏதாவதொன்றை யிழந்தவன் விகாரமனத்தனாய், பித்துபிடித்தவனாய் பலமாதிரியாக விருப்பதைப்போன்று, தன்னையுந் தனது யெண்ணத்தையும் அணுமாத்திரமேனும் வெளிசொல்லிக்கொள்ளாது "சழுத்தி நிலை வெளிசொன்னாற் றோன்றதோ வம்மானை தோன்றாப் பரவெளியுட் சுகமுறிக்குமம்மானை, சுகம்வேண்டி பள்ளியிலே தூங்கினர்காணம்மானை, தூங்கினர் தூங்கிலரே சோதியினாலம்மானை, சோதியிலே யிருள்வருமோ தொலைந்தப்போ மம்மானை, தொலைவதற்கு குருவாசிர் சொத்தங்காணம்மானை" எனுஞ் சிவப்ரகாச அம்மானையின் கருத்துரையின்படி ஞான சாகர தடாகத்திலமிழ்ந்து, என்றுமழியாத ஏகாத்மசொரூப லிங்காதாரமாக யிருப்பர். அவர்கட்கு பிறப்பற்றிருப்பதே முத்தியாகும்.

இத்தகைய பெரும்பாவிய ரகசியங்களை யுபதேசித்து வழிபடுத்தும்படியான ஆசாரியுமை; உள்ளபடித்தேடியலை வழிபமோர்க்கத்தின் படியடைந்து யாதொன்றுந் தெரிந்துகொள்ளவில்லையே? முடிவாக எல்லா புத்தியுமானவனே! திருமயிலையில் விளங்கி ஆயனுடைய தலைபோட்டைக் காக்கொண்ட பரமசிவமே! எனது ஆத்மபோதத்திற் கன்னியமின்றி தயைபாலிக்குங் கிருபையாளனே அநுக்ரஹஞ் செய்வாயாக என்பதாம். (௬)

இக்கான்கு சாதனையும் பற்றற்று நிலையடையவே யேற்பட்டதாதலால் ("செட்டை யொழிக்கிற் சிவந்தெரியு மம்மானை, சிவந்தெரிந்தால் வேறொன்றுஞ் சென்மிக்காதம்மானை, சென்மத்தன் சீவன்முத்தி சேர்ந்தவனாமம்மானை, சீவன்முத்தர் நம்மைப்போல் தெரிவரோவம்மானை, தெரிவார்க ளாருமுந் தெரிவொரேயம்மானை, தெரிந்தவர்களையே தெய்வ



மென்பா ரம்மானை, தெய்வமென்று நலமடைய சேவிப்பா ரம்மானை, சேவித்தாரெல்லாஞ் சிறப்படைந்தா ரம்மானை, சிறப்பென்ப தாகமத்திற் சிவஞான மம்மானை, சிவஞானஞ் சற்றவர்க்கு சென்மமிலை யம்மானை") எனச் சிவப்ரகாச அம்மானை வெளிப்படையாக யெடுத்துப்போதியாநின்றது.

அருளே வுருகொண் டறுபான் மூவ
ரிருவ ருடன்வந் திடுகோல நிலைத்
தருவாய்ப் புண்ணியஞ் சரணம் மயிலை
கருணா கரனே கபாலீச் சுரனே.

(இதன் வியாத்தியுரை) சகலாத்மகோடிகளை யாதரிக்கும்படியான அன்பின் முதிர்ச்சியினால் அவைகள் கடைத்தேறும்வகை சமயநெறியாருமாதலினாலவைகளையும் பெண்ணைத்திருவுளங்கொண்டு, காட்சி சாட்சி என்ற யிரண்டையு மனுபவத்திலுண்டாக்கி பிரசாதிப்பானாக, நிலைதசன மேனியையுடைத்தானவர்களாகவும், புறச்சமயங்களை யழிக்குந் திறமை அற்புதங்களிலைறக்கவர்களாகவும், மானிடச் சட்டையை வெளியிற்காட்டி, அந்தர்முகத்தி லறிவானந்த சிவமாகநின்றுந் திருப்பணி, துலய வழிபாடு, பக்தியினுண்மை, பிறவுமாய சத்கரும பரிபாலகளாக யாவராலுங்கண்டு வணங்கும்படியான வரப்பிரசாதிகளாம் அறுபத்து மூவரென்னுந் திருத்தொண்டர்கள் (உலக மக்களாலே பலவேறுப் பிரிவினையாகச் சுட்டிச்சொல்லும், வேறுஞ் சொல்லாகமுடியும். பலமாபினரும், ஒன்றகூடி யாவரும் நாயனார் என்ற பேதமில்லாது வணங்கவும், ஆதிசைவபிராமண குலதிலகராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரமசிவமே அடியாரென்று பொருட்செய்து துதிக்காமல் ஆலயத்துட் சென்றதைத் தெரிந்த விறன்மிண்ட நாயனார் கண்டித்ததை செவிமடுத்தவுடனே மனமுருகி (ஆரூரனாகிய என் அடியார்க்கு மடியேன்) என்பதாகப் பாடியத் திருத்தொண்டத் தொகையின் மகிமைப்பெறத் திருக்கூட்டத்தினர்கட் சூழ்ந்து வரவும், எல்லாப் பொருளிடத்துங் கலந்து விளையாடாநின்ற (தற்சொரூபம், சொச்சொரூபம்) எனுமிரண்டும் ஒன்றாகக் கலந்திருந்தும் வேறாகக் காட்சித்தருவானுன்னி, கர்ப்பகாம்பிகை, கபாலீச்சுரன் எனும் பெருருவலங்கார லட்சணம்ச சொரூபமாக என்னைத் தவிர வேறொருண்மைக்கடவுளில்லையென ஸ்தாபிப்பனவாய் முற்காலத்தில் தேவர்கட் கும்பிட்டு நன்மையடைந்ததைப்போல, இக்காலத்தும் மெய்யன்பர்களுடைய இருதயகமலத்தைவிட்டு நீங்கிலேனெனச் சாட்சியமாக திருக்கோலங்கொண்ட பரமசிவமே! உடல், பொருள், ஆவி, இம்மூன்றையுமுனக்கே தத்தஞ்செய்து மகிமைப்பெற்றன்ன அடியார்களுடைய திருவருளினிலையானதை சதாகாம்பும் அன்பர்களுக்கு தயைசெய்து

வும்பெண் ணுமையொருபாலாகும் பெருந்தருமமாகும் ஆண்டவனே! இந்த விண்ணப்பத்தினைக்கேட்டு, அருட்செய்யவேண்டுஞ் சுவாமி! நினது திருவடிக்கு அனந்தகோடி நமஸ்காரம், திருமயிலையினிது கோயிற்கொண்டு விளங்குந் தயாபரமூர்த்தியாகி பிரமாவின் தலையோட்டைக் கரத்தேந்துஞ் சிவபெருமானே! காருண்யனே! என்பதாம் (௯)

பஞ்சலோகம், மரக்கல், சிலை, மண், திருநீறு, இவைகளில் வித்தியாசங்களுண்டு உருசெய்து பூசித்தலும் கோமயம் முதலான பஞ்சகௌவியம் பழவர்க்கம் திரவியங்களிலுள்ள பதங்களுடன் அபிஷேகஞ் செய்வித்தலும், பலதழைகளும், புஷ்பங்களும் ஒன்றுசேர்த்து பூமாலையென சாத்துசெய்தலும், பொன், வெள்ளி, இரத்தினங்கள் ஒன்றுசேர்த்து நகையென்பதாகவும், பலநிறமுள்ளனவாகிய பஞ்சு, பட்டு, பீதாம்பர முதலியவை ஆடைகளாக அணிவித்தலும், பலவித மிருகாதியுருக்களா லமைக்கப்பட்ட ரதம், வாகன முதலியவைகளிலெழுந்தருள மனோரதமெனக்கொண்டு ஆனந்தித்து முத்திவீட்டடைவதற்கான வழிபாடுடன் கோஷித்தலும், ஆண்டவன்முன்னே நடனஞ்செய்வாரியாவரென்றறிந்தும் அறியாதார்போல உலகை மயக்கில்விட்டுத் தலையசைத்துத் தாளம்போடுதலும், இன்னுமனேக விஷயாகாரங்கள் மலிந்து ஒன்றுகூட பரமேசுவரன் சம்மதமுற்றவனாக சர்வசமயகோலாகலனாக வினிது வரந்தந்து யாவரையும் காக்கின்ற அன்பே சிவமாதற்போல, பலமதபினரும் ஒரே மார்க்கத்தினர்களாய் ஒரே சின்னமாகிய அடையாள முடையவர்களாய் ஈசுரபக்தியிற் கலந்து பலதேசம், பலபெயர், பலவிதமாக ஆண்டவன் திருப்பணியாகிய ஊழியம் நடத்தினர்களென்கினும்; சூரியனுக்குமுன்பட்ட வெப்பொருளும் உலர்ந்துபோவது சத்தியமாக விருப்பதைப்போல, கடவுட்பிரதை நிறையப்பட்டவர்கள் யாவரென்கினும் பாபமற்று புண்ணியதேகத்தினராவார்கள். அதனது வுண்மையும் பெருமையுந் தெரிந்தய்வான்வேண்டி பரமசிவமே "உலகெலாமுணர்ந் தோதற்கரியவனென" எடுத்துக் கொடுக்கப்பெற்ற பெரியபுராண மென்னுந் திருத்தொண்டர்ப் புராணத்தைப் பாடிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளை,

நேரிசை – வெண்பா.

"பெத்தமெல்லாம் போக்கும் பெரிய புராணத்தை
எந்தைபிரான் சேக்கிழா ரீந்திலரேல்—சுந்தரஞ்சேர்
நாயன்மார் கீர்த்தியெங்கே நல்லதமிழ் வேதமெங்கே
தூயசிவ பக்தியெங்கே—சொல்" என்பதாக, அநபாயச்

சோழமஹாராசன் பாடி வணங்கித் துதித்து ஆனந்தங்கொண்டாடினுரென்றால், அவைக்கு மேற்பட்டதொன்றில்லையென வேதாகமத்துணிபு.

—0—



துணைவேண்டிய அஷ்டகம்.

—*—

பண் – இந்தளம்.

பரமானந்தச் சுடரே தேவர்ப் பணிகொள் நிராமயனே
வரமேயருட் புரிவாய்த்ததி மன்றயோதிடும் பொருளே
சரணார விந்தமே நம்பினேன் தயர்ந் தனைக்கண் பாராய்
சுரர் போற்றிடு மயிலை கபாலீச் சுரனே துணைவந்தருளே (௧)
விதியேதரு மயனின் சிரமயின்னுங் கரமதிலே
மதியோடனவா தித்தனை வளர்மூ விழியதவாய்ச்
சதிரோடணி சிவமேசிவ சங்கரா சச்சிதானந்தா
துதிதங்கிடு மயிலை கபாலீச் சுரனே துணைவந்தருளே. (௨)
அகமே மெலிய நிடச்செய்திடு மலமைக்யெனு மூவாதை
மிகவே யதன் வழியேசென்று மெலிந்தேனென் மதிகுலைந்தேன்
புகலர்க்கொணு மிடிதீர்த்திடற் புண்ணியமதுவே றனதோ
தகவீக்கிடு மயிலை கபாலீச் சுரனே துணைவந்தருளே. (௩)
அன்பர்களி னுள்ளத்தனை யகலாத தற்பரனே
சன்மமதற் சென்மெனுங் கடலிற் றிரும்பாயலைந்தேன்
மன்னுஞ்சிவ வாநகம் வருமோ பின்பசித் தருமோ?
துன்பத்தவிர் மயிலை கபாலீச் சுரனே துணைவந்தருளே. (௪)
சீற்றிற்படு மிவைமெனக் கமோவைமாற் கலங்கி
றமுற தில்பூங்கழற் கிண்தகெவா திருந்தேன்
கூற்றன்வரு மக்காவெவர் கொடியேனை யாதரிப்பார்
தோற்றமுறு மயிலை கபாலீச் சுரனே துணைவந் தருளே. (௫)
எந்தாவெனவந்தாதரித் திடுஞ்சந்திர சேகரனே!
சொந்தே னுண்மைத் தெரிவா யடியர் தவழும் பெருமானே
சொந்தமெனும் பந்தமெல்லாஞ் சொல்லாதோர்க ளொழியுஞ்
சுந்தரமே மயிலை கபாலீச் சுரனே துணைவந் தருளே. (௬)
அங்கமதி லிங்கமென வமர்ந்தா யெனவே தெரிந்தார்
மங்கலமய் வாழ்வுற்றதில் மகிழ்ந்தார் சதாப்புகழ்ந்தார்
காவிது மென்போல்பழி யிழந்தா ரொருவரில்லைகாண்
தங்கமெனு மயிலை கபாலீச் சுரனே துணைவந் தருளே. (௭)
அயலானென வுலகோரெல நகைக்கச்செய்தது பொய்மொழியோ?
நயவஞ்சக னெனவே யெனை நாடாதிருந் திடினே
துயர் நீங்குமோ? நலமோங்குமோ? சோதிப்பது மழகோ?
சயம்பேத்திடு மயிலை கபாலீச் சுரனே துணைவந் தருளே. (௮)

## பிறந்தபயனைப் பேசுதல்.

—)(—

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

—(௧)—

அருளான குணமகளை யமலநாதர்
ஐம்மூர்த்தி யாகியைந் தொழி லடாத்தும்
பெருமானே அளவுபடா ஞானதேவே
பேரின்ப நிலையிருந்து வாழ்க்கை யளபார்
ஒருதென்று நந்திமிசை சாரி வந்து
எல்லவர்க்குங் காட்சிதரு மயிலையீசா!
பிருதிவெனும் மண்பொம்மை யாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௧)

கன்னலெனுங் கனியெனவே கற்றோ ருண்டே
களிக்கின்றக் கலைமணியே கண்ணே! விண்ணோ
சொன்னபமே யல்லாதுன் சொரூபந் தன்னைத்
தொய்தபதத் தனிக்கண்டு சுருசி யாட்சி
மன்னவுன் காட்சியினால் மகிழ்ந்தி லேனே
மரணமெனுங் கூற்றனுக்கு வாழ்க்கைப் பட்டேன்
பின்னுமுன்னு மறியாத மண்ணுள் மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௨)

வேதமதைப் புனற்கனலில் விடவும் வேற்றன்
வெப்புநோய்க் களைந்து வெண்ணீ றருளிச்செய்து
போதனைசொன் சிவநேசச் செட்டி செல்வி
பூம்பாவை யாகவொரு முதலை யுண்ட
காதன்மிகு சேயனுயிர்ப் பிழைக்க வுண்மைக்
காட்சிபெற்ற சமயிலைச் சிறிது முன்னாப்
பேதபுத்தி படைத்த பொம்மையாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௩)

தன்மையிலாச் சமணமதைச் சார்ந்து நூலைத்
தனையடைந்து முன்பணியுந் தருமைப் பெற்று
பன்னகம்வாய்ப் பட்டிறந்த சேயை யீர்துப்
பாராண்டோன் மகளுமை வாய்த் திறந்து
மன்னன்முன்னே பொய்ச்சமயப் பதடராகி
வாதுக்கு வந்தாருக்கு வழக்கைத் தீர்த்து



பின்னமிலா மலர்தெரியாப் படியே மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௪)

சீரான னெனுமகவாய்ச் செனிக்க லாகுஞ்
செழுவலியைச் சிறுத்தொண்ட னிக்கரவித்து
தீராத சென்மகடல் தனைக் கடந்தான்
திருக்குறிப்புத் தொண்டன்கல்லால் விதியுடைத்தான்
பூராய மாகத்தின்னை னுங்கண் ணப்பன்
பொய்க்கண்ணை மறைத்தமுதக் கண்ணைப் பெற்றான்
பேராசை புன்னூழ் மண்ணாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௫)

அரிவாட்டன் வினைக்கழுத்தை யரிக்கப் போழ்து
அற்புதமாய்க் கைப்பிடித்துத் தடுத்தாண்டாய்
தெரியாதுக் கலயன்மனைத் தாலி கொண்டே
திரும்பவளித் தாட்கொண்டதுந் தெளிவு தானே
கரிசனையாய்த் திருநீல கண்டத் தாலே
காதலற்ற தூர்த்தொழிந்துக் காட்சி யுற்றார்
பிரிந்திரோன் மண்பொம்மை யாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௬)

பரிவுடனே சடைமுடியும் வெண்ணீ றக்கம்
பார்விளங்க மூவுலகந் தன்னை யாண்டார்
பிரியாதத் திருநாளைப் போவார் தேகம்
பிசகாது கனிபோலுண்டப் பெருமை யார்க்குண்
டரிதரிது தேவர்களு மறிய மாட்டா
ரலகையுரு பெற்றவம்மை யடிக்கா ளானார்
பெரிதுணரா மண்பொம்மை யாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௭)

காச்சினப்பால் சுவைதருங் களித்து வுண்பார்
களதனமும் படைத்தவருங் கருத லீதே
பாச்சியதோர் சலத்திற்பயிர்ப் பிழைத்தார் போலப்
பகரரியத் திருத்தொண்டர்ப் பக்தி சான்றும்
மூச்சதுவு முடலைவிட்டுப் பிரிந்துப் போமே
மூடனேன் கதியென்ன மொழிவ ரியாரே?
பேச்சற்ற மண்பொம்மை யாகி மாயும்
பேயனேன் பிறந்தென்பயன் பேசு மாறே. (௮)

—(‡)—

## உபதேசமாலை.

—o—

### நெஞ்சொடு கிளத்தல்.

ஒலியோசை வண்ணச்சந்தம்.

அருமறைப் பொருளீச னடியைமறவா திரு நெஞ்சே மூடநெஞ்சே
அவனன்றி யோரணுவு மசையாது நம்பியிரு நெஞ்சே மூடநெஞ்சே. (1)
திருவருட்செயலன்றித் தீண்டாதொன் றந்தனை நெஞ்சே பாவநெஞ்சே
கருணைப்பெற் றினிதோங்கக் கவலையினைத் துறப்பாய் நெஞ்சே பாவ
சைவாகம நெறியைச் சார்ந்து நிலைக்கொண்டிரு நெஞ்சே பாவநெஞ்சே
மெய்யகுறவைக் கொண்டுப் பொய்யகுறவைநீக்கு நெஞ்சே பாவநெஞ்சே
கோல வெண்ணீறணிந்து குருவருட்காட்பவாய்நெஞ்சேமடநெஞ்சே
மூலப் பொருளுணர்ந்து முத்தி வழித்தேடுவாய் நெஞ்சே மடநெஞ்சே
ஐம்புல வேடரா லடங்காய் யாவுமுண்டாகும் நெஞ்சே மூட நெஞ்சே
வம்பு செறிந்தவ்வ ராதுசெய்வோரைநீக்கு நெஞ்சே மூட நெஞ்சே (5)
தெய்வ பயமிருந்தாற் றீயகுணமுண்டாமோ நெஞ்சே பாவ நெஞ்சே
வையகத்தில் மன்னுமறையுமுனக்குடைமை நெஞ்சே பாவநெஞ்சே (6)
நல்லவர்க் கிடர்செய்தால் நதன்மேல் துய்யுஞ்சொல்நெஞ்சே மடநெஞ்சே
பல்லறஞ்செய்திட்டாலும் பழிகளொழிவதில்லை நெஞ்சே மடநெஞ்சே (7)
முன்னிருந்த நிலையும் பின்வரும் கதிபோமோ நெஞ்சே மூட நெஞ்சே
என்னென்னவோ வெண்ணி யிழிவைத் தலையேற்றினாய் நெஞ்சே மூட
உன்னைநீ யறிந்திலை யுண்மையுங் கண்டிலை நெஞ்சே பாவ நெஞ்சே
சின்னபுத்தியடைந்து சிவனடி மறக்கின்றாய் நெஞ்சே பாவ நெஞ்சே (9)
கோடி கலைகற்றாலும் குணமடங்காப் படிப்பே னெஞ்சேமட நெஞ்சே
வேடிக்கையுஞ் சேட்டையால் வீணே காலங்கழித்தாய் நெஞ்சே மட
நாய்க்கடிப்பறவும் பின் நாயைக்கடிப்பாருண்டோ நெஞ்சே மூடநெஞ்சே
பேய்க்கு மந்திரமுண்டெம்பியைக் கண்ணுண்டு நெஞ்சேமூடநெஞ்சே
மாய வலித்தையால் மடிந்தாற் பயனுண்டோ நெஞ்சே பாவ நெஞ்சே
தூய சிவனைச் சார் துதித்திரு வினைகட்போம் நெஞ்சே பாவ நெஞ்சே
ஆங்காரப் பேய்களை யகன்றாற் சுகப்படுவாய் நெஞ்சே மட நெஞ்சே
நீங்காம லீங்கியுனுட் டேங்காமற் றூக்கியிரு நெஞ்சே மடநெஞ்சே - (13)
செஞ்சிலம்பணி யீசன் றிருவடிப் போற்றுவாய் நெஞ்சே மூடநெஞ்சே
பஞ்சபோற் பறந்தோடும் பற்றும்வினைகளெலாம் நெஞ்சேமூடநெஞ்சே



மெய்யையறியாதார்க்குப் பொய்பேபூரணச்சந்திரன்நெஞ்சேபாவநெஞ்சே
ஐயோ வுன்னையறிந்து யடங்கிவொடுங்கியிரு நெஞ்சே பாவநெஞ்சே 15
பத்தர் முத்தர் நல்லோர்க்குப் பழியாகச் செய்தபாபம் நெஞ்சே மட
எத்தனை தானந்தவஞ் செய்தால்விட்டொழிப்போகும்நெஞ்சேமடநெஞ்சே
இம்புக் குணம்படைத்து யெமனைப்போற் கொலைசெய்யு நெஞ்சே மூட
கொடுமைத் தனையுணர்ந்தாற் கூசித்தலைகுனிவாய்நெஞ்சே மூடநெஞ்சே
மோன மதுவேசிவ ஞானத்திற்கு வரம்பு நெஞ்சே பாவ நெஞ்சே
ஞானவர்ப் பதியினில் வாழ்வா யிந்நிலையோர்க்காமெனஞ்சேபாவநெஞ்சே
கடலுட் கலந்தசலங் காணுமோ வேற்றுருவாய் நெஞ்சே மூடநெஞ்சே
உடலுட்புகுந்தசிவ னென்றோ வேறோ? கண்டுசொல்நெஞ்சேமூடநெஞ்சே
அரனிறந்தாலல்லவோ அடியாரிறந்துப்போவார்நெஞ்சேமடநெஞ்சே
வரம்போற் சீவன்சிவத்துள் மறையுமண் மண்ணதாகும் நெஞ்சே மட
கோடானு கோடிசிவன் கும்பிடுந் தேவரானுரே நெஞ்சே பாவ நெஞ்சே
தேடாது கைவிட்டபின் பாடாய்முடிந்திடுமே நெஞ்சேபாவநெஞ்சே(21)
பேர்பெற்ற பலசென்மம் பிணமாகப் போகக்கண்ட நெஞ்சே மூட
ஆர்பெற்றார்த் திருத்தொண்டரற்புதமுங் கீர்த்தியுநெஞ்சேமூடநெஞ்சே
பேதமற்றவரல்லோ பிறவா முத்தியடைந்தார் நெஞ்சே மட நெஞ்சே
ஆதரவற்றவழி ரலையும்போ தெவர்த்துணை நெஞ்சே மட நெஞ்சே (23)
உப்புகர்ப்பூரம்போல வுடல்களொன்றாகக்காணுநெஞ்சேமூடநெஞ்சே
முப்பழமுண்டசிவ முத்தரோ கோடியிலொன்று நெஞ்சே மூட நெஞ்சே
உன்னைத் துறந்தேனென்று யுன்னைற் றுறந்தனையோ நெஞ்சேபாவநெஞ்
தன்னை யறிந்தாலங்குத் தலைவனைக்காண்பரென்றார் நெஞ்சேபாவநெஞ்சே
தேக வாலயம்போனாற் செய்தவாலயமெங்கே நெஞ்சே மூட நெஞ்சே
மோக போக யோகமு மோட்சந் தனைத்தருமோ நெஞ்சே மட நெஞ்சே
திருப்பணி யறியாதுத் தெருப்பணிச்செய்தனையே நெஞ்சே மூடநெஞ்சே
விருப்பும் வெறுப்புமிலா விமலர்க் கென்னவேண்டு நெஞ்சேமூடநெஞ்சே
எல்லா மீசன் பணியென் றெண்ணும் புத்தியிலையே நெஞ்சே பாவநெஞ்
வல்லக்கூற்றுவன்வந்தால் வாய்ப்பேச்சின் றியொழிவாய் நெஞ்சே பாவ
ஆரரை மோசஞ்செய்ய ஆண்டி வேடமெடுத்தாய் நெஞ்சே மட நெஞ்சே
பேராசைப்பிரபல்யம் பெருமைவிட்டொழித்தாயோ நெஞ்சேமடநெஞ்சே
தாய்த்தந்தை குருதெய்வந் தன்னைப் பூசித்தனையோ நெஞ்சே மூட
பேய்போற் றலைவிரித்துபேசினையே விஞ்ஞானம்நெஞ்சேமூடநெஞ்சே

இனியேனுங் கடைத்தேற வெதிருக்தமற்றிரு நெஞ்சே பாவ நெஞ்சே
மனமே நீ வென்வச மானல் சிவத்தலங்கும் நெஞ்சே பாவ நெஞ்சே
மண்ணுடைத்தால் மண்ணுகும் வள்ளுவர்போற் பொன்னுமோ நெஞ்சே
கண்ணுட் கலத்திருக்கும் கருத்தே மெய்க்காணு நெஞ்சே மட நெஞ்சே

## தெய்வப்புலமை. ஸ்ரீமத் - திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள்.

—(1)—

"அகரமுத லவ்வெழுத்தெல்லா மாதி பகவன்முதற்றே யுலகு" ஆதிக்கும் பகவனுக்கும், பிறந்த எழுவரில், கடைசியாக திருமயிலை இருப்பைத் தோப்பிலே பிறந்து அப்பூவின தேனையுண்டு அவ்வூரிலே வேளாளனொருவரால் வளர்க்கப்பட்டு, காவேரிப்பாக்கம் மார்க்கசகாய முதலியென்னும் வேளாளனுடையகுமாரத்தி வாசுகியம்மாள் மேடி நாயனாரால் கொடுக்கப்பட்ட மணலைச் சாதமாகச் சமைத்து வட்டித்ததனுல், சொல்லிய வார்த்தையைத் தவாது கலியாணஞ் செய்துகொண்டு தேவர்களியாவர்களாலுங் கொண்டாடி வணங்கும்படியாக இல்லறம்வகித்து செய்தற்றொழிலுஞற்றி, வாசுகியம்மாள், அவரது ஆசிர்பெற்று சமாதியானதின்பின் தெய்வப்புலமை. ஸ்ரீமத் - திருவள்ளுவ நாயனாரவர்கள் சமாதியான வேளை அவரது சிஷ்யன் ஏலேல சிங்கனுக்குக் கட்டளையிட்டவண்ணஞ் செய்யாது தரு விசுவாசப் பிரமாணத்தினுல் பெட்டியிலடக்கஞ் செய்துகொண்டு போக வழியில் பெட்டிக்குள் ளிருந்து வெளிப்பட்ட சப்தத்தைக்கேட்டவுடன் பயந்து முன் கட்டளையின்படி வெளியெடுத்து வைக்கோற் பிரிபினாற்கற்றி யிழுத்துச்செல்ல, அவரது தேகம் கல், முள், முதலானவைகளிற் செறண்டதால், அம்மாமிசத்தைப் பொசித்துப் பறவைகளியாவுந் தங்களது சொந்தருமாதி பொன்னுடலாய் விளங்கினதென்பதாம். மற்றவை, அவரது புராணத்திலும் படித்துக் கேட்டுதெளிதல்வேண்டும். இவர், மதுரைச்சங்கத்தையழித்தவர் இவரால் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறள் சர்வசமயத்தினரும பொன்னினுமேற்பட்டதாக அநுசரித்தும் அநுபவித்தும்வருகிறது, இந்நூல் "கடுகைத் துளைத்துக் கடலேழ்ப் புகட்டிக் குறுகத்தரித்தக் குறள்" என்றும் இன்னுமனவளாவிய சிறப்புவாய்ந்தன்னது.

செய்தன மழிந்திடிற் கைதவம் பாழென்றுரே நெஞ்சே யீன நெஞ்சே
தெய்வமது சிறினு லுய்ததெல்லாம் வீணுகு நெஞ்சே யீன நெஞ்சே. 33
சாக்காடுப்போகும்வரைசனனக்கூற்று விடுமோநெஞ்சேபொல்லாநெஞ்சே
பீக்காடடைத்திலேயே பேச்சினுலென்ன பயனெஞ்சே பொல்லாநெஞ்சே



காரணனை சத்தியாய் நம்மிணுடிருக்கின்றுராம் நெஞ்சே பாவநெஞ்
பேராபிரபேதத்தாற் பிசகுண்டேன் சொல்கிற்குமோ நெஞ்சே பாவநெஞ்
ஒருகாலுணவிலையே லோய்ந்துக்குந்தி யழுவாய் நெஞ்சே மடநெஞ்சே
திருகாலைக்கண்டதல்லாற் றினைகேதுஞ் சிந்தித்திலை நெஞ்சேமடநெஞ்சே
தொட்டயீசன்பணிக்கைவிட்டாற் கெட்டுபோவாயேநெஞ்சேமூடநெஞ்
சட்டுமுட்டு காடகமனைத் தடுத்திடுமோ நெஞ்சே மூடநெஞ்சே (37)
கைபாலடயுன்னைல்வைத்துவம்பொலத்தெரிந்தாயோநெஞ்சேஅட்டைநெ
புகைப்போ லுயிர்ப்போமுன்னம் புண்ணியஞ் செய்தால்வந்துறம்நெஞ்சே
சட்டுவென் போனப்பின்பு காடமெல்லைமூண்டு நெஞ்சே கலகநெஞ்சே
சொட்டுபுத்திபதனுற்றன்பம் கொண்டழுகின்றுய்நெஞ்சேகலகநெஞ்
காளெல்லாமுழைத்தாலு மல்லப்பெருமைக்குண்டோ நெஞ்சேமாயநெஞ்சே
ஆளாய்ச்சிவனடிக்கு வகன்றத்தனி மீட்டைச்செய் நெஞ்சே மாயநெஞ்சே
காதலுக்காட்படாதுகார்களுக் காட்பட்டாயேநெஞ்சேவன்மநெஞ்சே
பாதகம் தன்னைத்தீர்த்துப் பாகநித் தருவாரோ நெஞ்சே வன்மநெஞ்சே
சேத்துமன்வருமுன்னஞ்சிக்கிரஞ் சிவன்முட்சேவி நெஞ்சேகன்மநெஞ்சே
ஆத்துமம்போனபின்னிலையாகுலைக்கண்டுப்பிடிப்பார்நெஞ்சேகன்மநெஞ்
ஈசன் பணிக்குதவ வெத்தனைவித மெண்ணுவாய் நெஞ்சே கெட்டநெ
மோசவழிக் கழித்து முன்னும்பின் கெட்டலைவாய் நெஞ்சே கெட்டநெ
பட்டதெல்லாம் பாழாகிப் பரதேசியாய் நின்றுயே நெஞ்சே வைராக்ய நெ
கட்டதெல்லாஞ்சாவியோ நம்பனை நம்பிக்கெட்டாரியார்நெஞ்சே வைராக்ய
கொழுக்கக்கொடுத்துண்பிப்பார் கொஞ்சொல்லாலீடழிப்பார்நெஞ்சே
அழுத்திமண்ணிற்புதைப்பாரப்பாலெரப்பாரிச்சொல்வார்நெஞ்சேமுரட்
பாட்டுக் கூத்தையுங்கண்டுப் பல்லிளித்து மகிழ்ந்தாயேநெஞ்சே ஆபாசநெ
காட்டுமோகவிலயங் கடக்குமோமரணத்தை நெஞ்சேஆபாசநெஞ்சே. (46)
சாகாத கல்விகற்றோர் சாட்சாத் சிவமாவரே நெஞ்சே அற்பநெஞ்சே
வேகாதுத்தியதிலே மேவாது மட்குழிக்கு ணெஞ்சே அற்பநெஞ்சே
தன்மஞ் சாத்திர மண்டம் பல் சாவைமுப்பத் திரண்டுநெஞ்சேநீயநெஞ்சே
அன்பே சிவமானப்பி னனைத்து மொன்றிலொடுங்கு நெஞ்சேநீயநெஞ்சே
எல்லாநன்மையுஞ்செய்வாயெடுத்தெரிந்துக்கவிழ்ப்பாய் நெஞ்சேமடமை
வல்லார்களைநீகண்டால் வாய்மதம் கொண்டழிவாய் நெஞ்சேமடமைநெ
என்னப் பாடுப்பட்டாலு மிறக்கமென்பதில்லாத நெஞ்சே அஞ்ஞானநெஞ்
வின்னப்பமெஞ் சொற்சொல்லி வேதையை விளைவிக்கின்றனை நெஞ்சே அ

உடலைவிட்டுயிர்போகவுயிர்ப்போமிடங்கண்டாரியார்நெஞ்சே அறிவிலா
திடமாய்மண்ணைக் கொளுத்தித் திட்டென பால்தர்ப்பணஞ் செய்நெஞ்

மேலுக்கு விசுவாசம் வீணுக்கு வுபதேசம் நெஞ்சே மாறனநெஞ்சே
சாலுங்காகம்போல சாப்பாடொழிந்ததில்லைநெஞ்சே மாறனநெஞ்சே.(52)

